சைவசித்தாந்தசாரமான

மர 4

170

சைவசித்தாந்த

சாரமானமர 4

உ

திருச்சிற்றம்பலம்.

(சைவசித்தாந்தசாரமான)

மரபு.

இது

சைவாபிமானிகள் சிலர்

வேண்டுகோளின்படி,

வித்துவான்

சி. தாமோதரம்பிள்ளையவர்களால்

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

அச்சிடலாயிற்று.

சோபகிருதுஸு புரட்டாசிமீ.

விலை அணு 4.

விஷய அட்டவணை.

இயல்.	விஷயம்.		பக்கம்.
௧	தன்னியல்பு	...	௧
௨	பொதுவியல்பு	...	௪
௩	ஆதிதோற்றம்	...	௬
௪	முப்பொருள் நிறைவு	...	௯
௫	திரிபதார்த்தத்தன்மை	...	௯
௬	பதியொன்று	...	௧௦
௭	பதி விகாரமின்மை	...	௧௧
௮	பதி மலங் கலத்தல்	...	௧௧
௯	பதி உயிர் கலத்தல்	...	௧௧
௧௦	பதி மூர்த்தம்	...	௧௧
௧௧	பதி பூதபேதம்	...	௧௩
௧௨	பதி தனுப்படைத்தல்	...	௧௪
௧௩	பதி கன்மங் கொடுத்தல்	...	௧௫
௧௪	பதி மலங் கழித்தல்	...	௧௫
௧௫	பதி ஞானசாரியர் மூர்த்தம்	...	௧௬
௧௬	பதி கிருத்திய நித்தியம்	...	௧௬
௧௭	பசு மூவகைத் தன்மை	...	௧௭
௧௮	பசு பல	...	௧௮
௧௯	பசு அறிவுளன்	...	௧௮
௨௦	பசு சேர்ந்தவன்னம்	...	௧௯
௨௧	பசு உடல் பற்றல்	...	௧௯
௨௨	பசுவுக்குக் கிருத்தியம்	...	௧௯
௨௩	பசுவைக் கிருத்தியப் படுத்தல்	...	௨௦
௨௪	பசு பிரபஞ்ச முதல்வன்	...	௨௦
௨௫	பசுவின் பிறப்பு	...	௨௧
௨௬	பசு அறிதொழில் கெடுதல்	...	௨௧
௨௭	பசுவின் ஆறவத்தை	...	௨௨
௨௮	பசுவின் காரிய அவத்தைவகை	...	௨௪
௨௯	பசுநடை யெட்டு	...	௩௨
௩௦	மும்மல மயக்கம்	...	௩௩

இலக்கம்.	விஷயம்.	பக்கம்.
௩க	மலம் ஒன்று ...	௩ச
௩உ	மலச் சேர்க்கை ...	௩ச
௩௩	மல நீக்கம் ...	௩ச
௩ச	மாயைப் பற்று ...	௩ரு
௩ரு	கன்ம தேட்டம் ...	௩சா
௩சா	திரோதம் ஒன்று ...	௩சா
௩எ	மாயை யொன்று ...	௩எ
௩அ	கன்ம மொன்று ...	௩எ
௩கூ	மூவித கன்மம் ...	௩அ
ச0	கன்ம மாறல் ...	௩கூ
சக	பிராரத்த சொரூபம் ...	ச0
சஉ	பிராரத்த மூவகை வரவு ...	ச0
ச௩	மாயாகாரிய போகம் ...	ச0
சச	கேவல சகலப் பேர் ...	சக
சரு	சிவபுண்ணிய காரணம் ...	சக
சசா	சிவபுண்ணியம் ...	சஉ
சஎ	கன்ம பரிபாகி தன்மை ...	ரு0
சஅ	மலபரிபாகி தன்மை ...	ருக
சகூ	மலபரிபாகம் ...	ருக
ரு0	சத்திநிபாதம் ...	ருக
ருக	இருவினை யொப்பு ...	ருஉ
ருஉ	நிருவாண தீக்ஷை ...	ருஉ
ரு௩	பஞ்சாக்ஷர வரலாறு ...	ருரு
ருச	ஞானி தன்மை ...	ருஎ
ருரு	சரீரந், திருமேனி வருதல் ...	ருஅ
ருசா	பிரபஞ்ச உற்பத்தி யொடுக்கத் திற்குக் காரணம் ...	ருஅ
ருஎ	கெட்டு மோக்ஷம் ...	ருஅ
ருஅ	பிரபஞ்சத்தோற்ற மொடுக்கம் ...	ருகூ
ருகூ	மோக்ஷ வழி ...	ருகூ

உ

திருச்சிற்றம்பலம்.

மரபு.

திருவாக்கு.

அநாதிச்செய்தியும், பஞ்சாக்கரத்தி னுண்மையுங், கன்ன பரம்பரையாக வருவதாற், றிருவாக்குப் பெற்றறிக.

ஆதிப்பொருளாவது, அருளுக்கு அபின்னமாகிய பதி-க. பசுக்கள்-க. ஆனந்தமென்னும் ஆணவமலம்-க. பிராரத்த கன்மம்-க. பின்னுசத்தியாகிய சுத்தமாயை அசுத்தமாயை-உ. ஆக ஆதிப்பொருள்-சு. இதுவும், பின்னுசத்தி பேதமாகிய திரோதம்-க. ஆக வகை இரண்டினுல் இவ்வேழு பொருள்களையுந் திரிபதார்த்தத்தி லடக்கித் திரிபதார்த்தமாகச் சொல்லுதலுமாம்.

க. தன்னியல்பு.

அருளுக்கு அபின்னமாகிய பதிக்கு எண்ணிறந்த தன்னியல்புக் குணம் உண்டு. அதில் இரண்டு குணஞ் சொல்லுகிறேம். அதேதென்னில், தனக்கு ஒருவரும் அறிவியாமல் தானே யறியுங் குணம் - க. ஆன்மாக்களுக்கு அறிவிக்கின்ற குணம்-க. ஆகக் குணம் - உ. ஆன்மாக்களுக்கு எண்ணிறந்த தன்னியல்புக் குணம் உண்டு. அதில்

இரண்டு குணஞ் சொல்லுகிறோம். அதேதென்னில், அறிவித்தா லறிகின்ற குணம் - க. பிறருக்குஅறிவிக்கமாட்டாதகுணம்-க.ஆகக்குணம்-உ. இனி ஆணவமலத்துக்கு எண்ணிறந்த தன்னியல்புக் குணம் உண்டு. அதில் இரண்டு குணஞ் சொல்லுகிறோம். அதேதென்னில், புகழில்அவா பொருளில் அவா யான் எனதென்பதை விளக்குங் கந்த பீச மங்குரவாடையையுடைய தனது சத்தியினுலே ஆன்மாக்களை யானே எல்லோரினுந் திறவானென்று நினைக்கப் பண்ணுவிக்குங் குணம் - க. ஆன்மாக்களைத் தனதல்லாத தேகாதி பிரபஞ்சங்களைத் தனதென்று நினைக்கப் பண்ணுவிக்குங் குணம் - க. ஆகக் குணம் - உ. இனிப் பிராரத்த கன்மத்திற்கு எண்ணிறந்த தன்னியல்புக் குணம் உண்டு. அதில் இரண்டு குணஞ் சொல்லுகிறோம். அதேதென்னில், ஆன்மாவுக்குப் பெத்தகாலத்தில் இன்ப துன்பமாகத் தோன்றுங் குணம் - க. ஆன்மாவுக்கு முத்தி காலத்தில் மலமருந்தாகத் தோன்றுங் குணம்-க. ஆகக் குணம்-உ. இனிப் பின்னுசத்தியாகிய சுத்த மாயைக்கு எண்ணிறந்த தன்னியல்புக் குணம் உண்டு. அதில் இரண்டு குணஞ் சொல்லுகிறோம். அதேதென்னில், அண்டத்திலும் பதிவர்க்கத்துக்கு இடமாகவிருக்கின்ற குணம் - க. பிண்டத்திலும் பதிவர்க்கத்துக்கு இடமாக விருக்கின்ற குணம் - க. ஆகக் குணம் - உ. இனிப் பின்னு சத்தியாகிய அசுத்தமாயைக்கு எண்ணிறந்த தன்னியல்புக் குணம் உண்டு. அதில் இரண்டு குணஞ்

சொல்லுகிறோம். அதேதென்னில், ஆன்மாவுக்கு எந்தக்காலமுங் கன்ம தாரகமாகவும், சர்வசங் காரகாலத்தில் ஆன்மாக்களுக்குத் தாரகமாகவும் இருக்கின்ற குணம் - க. அபரநாதமுதற் பிரமா விறுக வமு மூர்த்தத்துக்கும் மற்றுள்ள பதிவர்க் கங்களுக்கும் மூவகை யான்மாக்களுக்குந் தனு கரண புவன போகங்களாயிருந்து, அவைகளிலே வியாபித்துநிற்குங்குணம்-க. ஆகக்குணம்-உ. ஆக இந்த ஆதிப்பொருள் ஆறுக்குந் தன்னியல்பை யறிக. இதுவும், அபின்னசத்திபேதமாகிய திரோ தத்திற்குஎண்ணிறந்ததன்னியல்புக்குணம்உண்டு. அதில் இரண்டு குணஞ்சொல்லுகிறோம். அதே தென்னில், ஆன்மாவுக்கு மலபரிபாகம் பிறக்கும் படிக்குப் பிரபஞ்சத்தை யெல்லாங் கர்த்தாவே காரியப்படுத்துகின்றா ரென்பதை மறைக்குங் குணம் - க. ஆன்மாவுக்குக் கர்த்தா ஒரு சரீரத் தைக் கொடுத்துப் பற்றி யிருக்குங்கால் மற்றை ச்சரீரங்களைப் பற்றுமலும், ஒரு விடயத்தைப் பற்றுங்கால் மற்றைவிடயங்களைப் பற்றுமலும் மூவகைத் திரிவாக மறைக்குங் குணம் - க. ஆக க்குணம்-உ. இனிப் பின்ன சத்தியாகிய அசுத்த மாயையின் பேதமாகிய பிரகிருதி மாயைக்கு எண்ணிறந்த தன்னியல்புக் குணம் உண்டு. அதில் இரண்டு குணஞ் சொல்லுகிறோம். அதேதென் னில், மாயாகாரியங்களைப் பண்ட பதார்த்தமாக க்காட்டி நிற்குங் குணம் - க. ஆன்மாவை முக் குண பேதங்களிலும் மயக்குவிக்குங் குணம் - க. ஆகக்குணம்-உ. ஆக இது தன்னியல்பென்றறிக.

உ. பொதுவியல்பு.

இனிப் பொதுவியல்பாவது, அநாதிக் குழப்பத்தில், அனந்தமாகிய வுன்னலிற்றோன்றினது, சிற்பரத்தையுடைய ஆன்மாவும், மலமும். அருளாகிய ஏதுவிற் றோன்றினது, பரநாதம் பரவிந்துவும், மாயையும். அந்த மாயையும் பரவிந்துவுக்கு ஆன்மாவின் மலத்தை நாமே தீர்க்கவேண்டுமென்ற மயக்கத்தைக் கொடுத்துக் கொண்டு நின்று, அந்தப் பரநாதம் பரவிந்துவிற் றோன்றிய அபரம், துவிதநாதத்துக்குந் தேகமாகவும், அபரவிந்துவுக்குப், பரம அணுவாகிய தேகமாகவும் நிற்கும். இந்த அபரம் அந்த மாயையைச் சுத்த மாயை அசுத்த மாயை என்று இரண்டுவகையாக வகுத்துப் பதி பேதங்களுக்கும் ஆன்மாக்களுக்குங் கொடுத்தது. ஆன்மா அந்த ஆணவமலத்தில் அழுந்துகிறபோது மேலிடவேண்டுமென்ற அவாவாகிய மலசத்தி முதிர்ச்சிப் பட்டதைப் பதி யிரக்கத்தினாலே யறிந்து, அந்த மலசத்தியைத் தீர்த்துத் தனது திருவடி சேர்த்துக்கொள்ளவேண்டி, ஆன்மாவுக்கு மலசத்தியாகிய அவாவின் தரத்திலும் அதிக தரமாகிய மாயாதனுவைக் கொடுத்தாலும் சரிதரமாகிய மாயாதனுவைக் கொடுத்தாலும் தனுவை மலசத்தி விழுங்கி வெளியிலே பொங்கி வரமாட்டாதென்பதால், மலசத்தியின் றரத்திலுங் குறைந்த தரமாகிய தனுவைக்கொடுத்தது. அந்த மல்சத்தி அந்தத் தனுவை விழுங்கி வெளியிலே வந்தது. இப்படி வெளியிலே பொங்கி வந்த மலசத்திக்கு, இந்த மலசத்தியின் றரத்தி

னுங் குறைந்த தரமாகிய பிராரத்தப் புசிப்பைக் கொடுத்தாலும் மலசத்தியை யடக்கிவிழுங்கமாட்டாதென்று, அதிக தரமாகிய பிராரத்தப் புசிப்பென்னுந் துன்பத்தை அந்தத் தனுவோடு வைத்துத் திரோதான சத்தியினுலே மறைத்து மறைத்துக் கொடுத்து மலசத்தியை யடக்கிவிழுங்கப்பண்ணினது. மலசத்தி இந்திரியமாகிய தனுவைத் தனக்கு இலேசாகக் கண்டு விழுங்கினபடியினுலே, இந்திரியத்திற்கு இணங்கின புசிப்புமாத்திரம் மலசத்தியோடு சேர்ந்த ஆன்மபோதத்திற்கு இன்பம். கட்டளையிட்ட பிராரத்தத்தை மலசத்தி தனக்கு இலேசாகக் கண்டு விழுங்கினபடியினுலே, மலசத்தியோடு சேர்ந்த ஆன்மபோதத்திற்கும் இந்திரியத்திற்கும் இணங்காத புசிப்பெல்லாந் துன்பம். மலசத்திக்குத் தாழ்ந்த தரமாகிய இந்திரியத்தளவு துன்பமென்னும் பிராரத்தத்தைக் கொடுத்தால், இந்திரியத்தை விழுங்கின மலசத்தி இந்தப் புசிப்பையும் விழுங்கிவிடுமென்பதால், இந்திரியத்திற்கு அதிக தரமாக இந்திரியந் தாங்கமாட்டாத புசிப்பையுங் கொடுத்தது. மலசத்தியை யடக்கி விழுங்கும்படியாகக் கட்டளையிட்ட துன்பத்தில், மலசலத்திக்குள்ளடங்கிய இந்திரியத்திற்குள்ளே யடங்கின துன்பப் புசிப்பை மாத்திரம் மலசத்தியோடே சேர்ந்த ஆன்மபோதம் இன்பமாகக் கொண்டு விரும்பினது. இந்த இந்திரியத்துக்கு ளடங்காத துன்பப் புசிப்பை மலசத்தியோடு சேர்ந்த ஆன்மபோதம் துன்பமாகக் கொண்டு வெறுத்தது. இப்

படி விரும்பி வெறுத்துப் புசிக்கையில், அந்தப் புசிப்பை வேண்டும் வேண்டாமென்று முற்றி னான். இப்படி முற்றின நினைவை மேல் நடத்த வகைதெரியாத ஆன்மாவுக்குப், பதி, ஆன்மாக் களுக்கு இதவகிதமாக முடிகிற இருவினையைக் காட்டினார். அந்த நல்வினை தீவினையாகிய ஆகாமி யத்தை ஆன்மாச் செய்ய, அது மாயையிலே கட்டு க்கிடையாகிய சஞ்சிதமென்னும் புண்ணிய பாவ மாகக் கட்டுப்பட்டது. இந்தக் கட்டுப்பாடு வரு பிறப்பையும் விளைத்து, அதற்குப் பிராரத்தமென் னும் இன்பதுன்பத்தையும் விளைக்கும். ஆன்மா விரும்பி வெறுத்துப் புசிக்கையில் வேண்டும் வேண்டாமென்று முற்றுதலால் ஆகாமியமாயி ற்று. இப்படிச் சனன மரணப் படுங்காலங், கிரி யாசாரியரால் மூன்று தீக்ஷையும்பெற்று, வேறு வினையென்று பெயரையுடைய உபாயச் சரியை யாதி நான்கும் உண்மைச் சரியை கிரியாயோக மூன்றுஞ் செய்ய வருங்கால், முளைகுருத்தென்று பெயரையுடைய யானென தென்னும் மலசத்தி கெட்டு, இருவினையுஞ் சரியாகக் கண்டகாலம், ஆன்மா அருளோடு சேர்ந்ததென்று பதியறி ந்து, திருமேனிகொண்டு, சுத்தாவத்தைப்படுத்தி, வேர் கிழங்கென்னுந் தேகாதியிலவாவையும் புகழிலவாவையுந் தீர்த்துத் தமது திருவடிகளி லே சேர்ப்பிக்கும். ஆக இது பொதுவியல் பென்றறிக.

௩. ஆதி தோற்றம்.

ஆதிதோற்றமாவது, ஆதியிலே பிரமா பிரப் ஞ்சமுண்டாக்க வேண்டுமென்று அபரத்தைநோ

க்கிப் பிரமத்தை யுச்சரித்துக் கொண்டிருக்கிற போது, அவர் நெற்றியிலே ஒரு தேவப்பிராமண னும் மேற்படி பெண்ணும் பிறந்தார்கள். அவர்க ளிருவரும் பிரமாவினுத்தரவின்படி பதினொரு நூறுயிர முகபேதமாய்த் தேகமெடுத்துப் புணர் ந்தபோது மேற்படி முகபேதத்திற்கும் ஓரொரு தேவப்பிராமணனும் மேற்படி பெண்ணும் பிறந் தார்கள். இவர்கள் சையோகத்தினுல் அந்தந்த முகபேதமாய் விரிந்தது. ஆதிப்பிராமணனும் மே ற்படி பெண்ணும் பிரமாவினுத்தரவின்படி ஒன் பது நூறுயிர முகபேத மானிடப்பிராமணராகத் தேகமெடுத்துக் கூடிப் புணர்ந்தபோது கூறு முகபேதத்திற்கும் ஓரொரு மானிடப் பிராமண னும் மேற்படி பெண்ணும் பிறந்தார்கள். இவர் கள் சையோகத்தினுலே அந்தந்த முகபேதம் விரிந்தது. பிரமாவினிருதயத்திலே ஒரு தேவ க்ஷத்திரியனும் மேற்படி பெண்ணும் பிறந்தார் கள். அவர்களிருவரும் பிரமாவினுத்தரவின்படி மேற்படி-முகபேதமாய்த் தேகமெடுத்துப் புணர்ந் தபோது மேற்படி முகபேதத்திற்கும் ஓரொரு தே வக்ஷத்திரியனும் மேற்படி பெண்ணும் பிறந்தார் கள். அவர்கள் சையோகத்தினுலே அந்தந்த முக பேதம் விரிந்தது. அந்த ஆதிக்ஷத்திரியனும் பெ ண்ணும் பிரமாவினுத்தரவின்படி ஒன்பது நூறு யிர மானிட க்ஷத்திரியராகத் தேகமெடுத்துப் புணர்ந்தபோது கூறு முகபேதத்திற்கும் ஓரொ ரு மானிட க்ஷத்திரியனும் மேற்படி பெண்ணும் பிறந்தார்கள். அவர்கள் சையோகத்தினுலே அந்

தந்த முகபேதம் விரிந்தது. பிரமாவின் தொடை யிலே ஒரு தேவ வைசியனும் மேற்படி பெண் ணும் பிறந்தார்கள். இவர்களிருவரும் பிரமாவி னுத்தரவின்படி கோடி முகபேதமாய்த் தேகமெ டுத்துப் புணர்ந்தபோது கோடி முகபேதத்திற் கும் ஒவ்வொரு தேவவைசியனும் மேற்படி பெண் ணும் பிறந்தார்கள். இவர்கள் சையோகத்தின லே அந்தந்த முகபேதம் விரிந்தது. அந்த ஆதி வைசியனும் பெண்ணும் பிரமாவினுத்தரவின்படி கூடி முகபேதமானிட வைசியராய்த் தேகமெ டுத்துப் புணர்ந்தபோது கூடி முகபேதத்திற் கும் ஒவ்வொரு மானிட வைசியனும் மேற்படி பெ ண்ணும் பிறந்தார்கள். இவர்கள் சையோகத்தி னலே அந்தந்த முகபேதம் விரிந்தது. பிரமாவி ன் பாதத்திலே ஒரு தேவ சூத்திரனும் மேற்படி பெண்ணும் பிறந்தார்கள். இவர்களிருவரும் பிர மாவினுத்தரவின்படி கோடி முகபேதமாய்த் தே கமெடுத்துப் புணர்ந்தபோது கோடி முகபேதத் திற்கும் ஒவ்வொரு தேவசூத்திரனும் மேற்படி பெ ண்ணும் பிறந்தார்கள். அவர்கள் சையோகத்தி னலே அந்தந்த முகபேதம்விரிந்தது. அந்த ஆதி சூத்திரனும் பெண்ணும் பிரமாவினுத்தரவின்படி கூடி முகபேத மானிட சூத்திரராகத் தேகமெடு த்துப் புணர்ந்தபோது கூடி முகபேதத்திற்கும் ஒவ்வொரு மானிட சூத்திரனும் மேற்படி பெண் ணும் பிறந்தார்கள். இவர்கள் சையோகத்தின லே யந்தந்த முகபேதம் விரிந்தது. இந்த நான்கு சாதிகளும் ஒரு சாதியுடனே ஒருசாதிகூடிப் புண

ர்ந்து பலசாதியு முண்டாயிற்று. பிரமா மற்றைத்தேகங்களைச் சிருட்டிக்கவேண்டி வளர்த்த ஓமத்தில், நாற்கால் விலங்கு மொது முகபேதத்திற்கும் ஒவ்வொரு ஆணும் மேற்படி பெண்ணும், பறவைகள் பத்துநூறுயிர முகபேதத்திற்கும் ஒவ்வொரு ஆணும் மேற்படி பெண்ணும், நீர்வாழ் சாதிமொது முகபேதத்திற்கும் ஒவ்வொரு ஆணும் மேற்படி பெண்ணும், ஊர்வனசாதி மிருாது முகபேதத்திற்கும் ஒவ்வொரு ஆணும் மேற்படிபெண்ணும், தாவரம் மிகாது முகபேதத்திற்கும் ஒவ்வொரு ஆணும் மேற்படி பெண்ணும் பிறந்தன. இவைகளால் அந்தந்த முகபேதம் விரிந்தது. இவைகளில் ஒரு முகபேதத்தி லொரு முகபேதந் தோன்றுவதுமுண்டு. ஆக இது ஆதி தோற்றமென்றறிக.

ச. முப்பொருள் நிறைவு.

முப்பொருள் நிறைவாவது, பதி வியாபகமென்னுந் தாரக நிறைவாயிருக்கும். பசுவும் பாசமும் வியாத்தமென்னுஞ் சமநிறைவாகவிருக்கும். இந்தச் சமநிறைவாகிய இரண்டு பொருளுந் தாரக நிறைவாயிருக்கின்ற பதியில் வியாப்பியமென்னும் ஒன்றிலொன்றடங்கின நிறைவாயிருக்கும். இது எதுபோல வென்னில், சமுத்திர வெளியிலே உப்புஞ் சலமுங் கலந்து அடங்கியிருப்பதுபோலவென்றறிக.

ரு. திரிபதார்த்தத் தன்மை.

திரிபதார்த்தத்தன்மையாவது, பெயர், வஸ்து, சொரூபம், சுபாவம். ஆக நாலுக்கும் வகை; பெ

யர் ஆணவமலம், வஸ்து வியாதி வஸ்து, சொரூபம் இருள் சொரூபம், சுபாவம் அகமறைப்பு, ஆக மலத்தின்றன்மை-ச. பெயர் கன்மமலம், வஸ்து மருந்து வஸ்து, சொரூபம் விடய சொரூபம், சுபாவம் மலமடக்கல், ஆகக் கன்மமலத்தின்றன்மை-ச. பெயர் சுத்தமாயை அசுத்தமாயை மலம், வஸ்து பாத்திரவஸ்து, சொரூபம் தேகசொரூபம், சுபாவம் கன்மதாரகம், ஆகச்சுத்தமாயை அசுத்தமாயை மலத்தன்மை-ச. பெயர் திரோதமலம், வஸ்து திரைவஸ்து, சொரூபம் படசொரூபம், சுபாவம் புறமறைப்பு, ஆகத் திரோதமலத்தின் றன்மை-ச. பெயர் பசு, வஸ்து வியாதிபாள வஸ்து, சொரூபம் சேர்ந்த வன்னம், சுபாவம் இரக்ஷைப்படுதல், ஆகப் பசுவின்றன்மை-ச. பெயர் பதி, வஸ்து வைத்தியவஸ்து, சொரூபம் பிரகாச சொரூபம், சுபாவம் இரக்ஷித்தல், ஆகப்பதியின்றன்மை-ச. ஆக இது திரிபதார்த்தத் தன்மையென்றறிக.

சூ. பதி யொன்று.

பதியொன்றுவது, பதி யொரு பொருளாகவிருந்து, தமது சத்தியினாலே, எண்ணிறந்த புவனங்களிலே எண்ணிறந்த பசுக்களுக்கு எண்ணிறந்த தனுவைக் கொடுத்து, எண்ணிறந்த பிராரத்தத்தைப் புசிப்பிக்கும். அது எதுபோல வென்னில், இராசா ஒருவனாகவிருந்து, எண்ணிறந்த ஊர்களிலே எண்ணிறந்த பேர்களுக்கும் எண்ணிறந்த வீட்டைக் கொடுத்து, எண்ணிறந்த இன்ப துன்பத்தைப் புசிப்பிப்பதுபோல வென்றறிக.

எ. பதி விகாரமின்மை.

பதிவிகாரமின்மையாவது, பதி வியாபகத்துக்குள்ளே யிருக்கிற பசுப் படும் நரகவேதனை முதலிய துன்பம் பதிக்குத் தாக்காது. அது எதுபோலவென்னில், ஒருவன் வயிற்றுக்குள்ளே யிருக்கிற புழுப் படுந் துன்பம் அவனுக்குத் தாக்காததுபோல வென்றறிக.

அ. பதி மலங்கலத்தல்.

பதி மலங்கலத்தலாவது, மலமும் மலப்பகை யாகிய பதியும் ஒரு பசுவினிடத்திலே கூடியிருக்கும். அது எதுபோலவென்னில், ஒரு மரத்தினிடத்திலே முற்காலத்திற் சலம் மிகுந்தும் அக்கினி குறைந்து மிருப்பதுபோல வென்றறிக.

கூ. பதி உயிர்கலத்தல்.

பதி உயிர்கலத்தலாவது, ஆதியில்மலசகிதராக விருக்கிற ஆன்மாக்களிடத்தில் சிற்பரமாகியதிருவருள் அணுவளவாகவிருந்து, கன்மப்புசிப்பினால் மலம் ஒடுங்க வொடுங்கச் சிற்பரம் பெருகி வளர்ந்து, ஆன்மாக்களுக்கு இரக்கத்தையும் அச்சத்தையுங் கொடுத்துக்கொண்டு நிற்கும். அது எதுபோலவென்னில், ஒரு ராசாவினிடத்திலே ஒரு மந்திரி பிரியாமலிருந்து புத்தி சொல்லுகிறது போல வென்றறிக.

க0. பதி மூர்த்தம்.

பதிமூர்த்தமாவது, ஆதியிலே பரன் ஆன்மாவினுணவமலத்தைச் சகியாமையாற் பிறந்த தனதிர

க்கமாகிய பராசத்தியிலடங்கி அபின்னமாக நிற்பன். இந்தப் பராசத்தி ஆன்மாக்களுக்கு அந்த ஆணவமலத்தைத் தீர்ப்பதற்கு நாமேயன்றி மேல் முதலில்லையென்று நின்ற அவதரம் திரோதான சத்தியாகிய ஆதிசத்தி. அந்தப் பராசத்தி அந்த ஆணவமலத்தை நீக்கி ஆன்மாவையெடுக்கவேண்டிய ஆசையாய் நின்ற அவதரம் இச்சாசத்தி. அந்தப் பராசத்தி ஆணவமலத்தின் றரத்தையும் பிராரத்த கன்மத்தின் சுபாவத்தையும் அறிந்து நின்ற அவதரம் ஞானசத்தி. அந்தப் பராசத்தி அந்த ஆணவமலமாகிய ஆன்மாவின் சகசமலத்தைத் தீர்ப்பதற்கு ஆகந்துகமலமாகிய பிராரத்த கன்மமலம் திரோதமலம் சுத்தமாயாமலம் அசுத்த மாயாமலம் ஆக நாலையுங் கருவியாகக் கூட்ட வேண்டுமென்று நின்ற அவதரம் கிரியாசத்தி. ஆக இந்தப் பஞ்சசத்தி மூர்த்திமானாக நின்ற பரனுக்கு அருவமாகிய பரநாதமென்றும் அந்த ஆதிசத்தி முதலான நாலு சத்தியையும் உடைய பராசத்திக்கு அருவமாகிய பரவிந்துவென்றும் பெயர். இது ஞானிகளுக்குத் தரிசனம். இந்தப் பராசத்தி ஆன்மாக்களுக்கு அந்த ஆகந்துகமலத்தைக் கூட்டுவிக்குந் தரமாக நிற்கவேண்டுமென்று நின்ற அவதரத்திற்றோன்றிய சிவத்துக்கும், இதற்கு அபின்னமாகிய சத்திக்கும் அருவமாகிய அபரநாதமென்றும் அபரவிந்துவென்றும் பெயர். இது யோகிகளுக்குத் தரிசனம். இந்த அபரசத்தி ஆன்மாக்களுக்கு ஆணவமலந்தீரப் பிராரத்த கன்மத்தைக் கொடுக்கவேண்டுமென்று நின்ற அவதரத்

திற் றேன்றியது அநுக்கிரக கிருத்தியத்தையும் அருவுருவத்தையுமுடைய சதாசிவமும் மனோன் மனி சத்தியும். அந்த அபரசத்தி ஆன்மாக்களுக் கு இந்தப் பிராரத்த கன்மத்தை ஒவ்வொன்றாக மறைத்து மறைத்துக் கொடுக்கவேண்டுமென்று நின்ற அவதரத்திற்றோன்றியது திரோபவ கிருத் தியத்தையும் உருவத்தையுமுடைய மகேசுரனும் ஈசுரசத்தியும். அந்த அபரசத்தி ஆன்மாக்களுக்கு இளைப்பொழித்தல் காரணமாக இந்தப் பிராரத்த கன்மத்தை மாற்றி மாற்றிக் கொடுக்கவேண்டு மென்று நின்ற அவதரத்திற்றோன்றியது சங்கா ரகிருத்தியத்தையும் உருவத்தையும் உடைய உரு த்திரனும் உமைசத்தியும். அந்த அபரசத்தி ஆன் மாவினறிவிலே இந்தப் பிராரத்த கன்மத்தை யறி யுந்தொழிலுக்கு அந்தக்கரணத்தை நிறுத்த வே ண்டுமென்று நின்ற அவதரத்திற் றோன்றியது திதி கிருத்தியத்தையும் உருவத்தையு முடைய விஷ்ணுவும் இலக்குமி சத்தியும். அந்த அபரசத்தி ஆன்மாக்களுக்கு இந்தப் பிராரத்த கன்மத்தை யறியுந்தொழில் நிறுத்துகின்றதற்குத் தாரகமாக அறிகருவியைக் கொடுக்கவேண்டுமென்று நின்ற அவதரத்திற் றோன்றியது சிருட்டி கிருத்தியத் தையும் உருவத்தையு முடைய பிரமாவும் சரஸ் வதி சத்தியும். ஆகச் சதாசிவமுதலாகப் பிரமா வீறாகத் தேவர்களுக்குத் தரிசனம். ஆக இப் படி மூர்த்திகரிப்பதென் றறிக.

கக. பதிபூத பேதம்.

பதிபூத பேதமாவது, ஆதி சிருட்டி செய்யுங் காலம் பதியாகிய அபரநாதம் அபரவிந்துவிற்

றேன்றினது பிருதிவியாதியாகப் பஞ்சபூதம். இதற்கு அதி சூக்கும பூதமென்றும் பெயர். இது புறப்பூதம் அகப்பூதமென இருவகையாக விருக்கும். அதிற் புறப்பூத பேதமாகிய பிருதிவியாதி யைந்தும் பிரமாதி ஐவருக்குந் தாரகமாக நின்று அவரவர் ஒடுங்குங்காலம் அந்தந்தப் பூதமும் ஒடுங்கும். இந்த அதிசூக்கும பஞ்சபூதத்தை நோக்க அசுத்தமாயா தோற்றமாகிய கரசரணாதியாயுள்ள சரீரத்துக்குச் சூக்கும பூதமென்று பெயர். அந்தச் சூக்கும பூதத்தை நோக்க மண் நீர் அனல் கால் வான் ஆக இப்படியிருக்கின்ற சரீரத்திற்குத் தூலபூத மென்று பெயர். ஆக இது புறப்பூத பேதம். இனி அகப்பூதபேதமாகிய பிருதிவியாதி அதிசூக்கும பூதமைந்துஞ் சரீரங்களிலே நின்று ஆன்மா ஞானேந்திரிய மைந்திலுஞ் சென்று புசிக்கிறதற்கு இடமாகவிருந்து தன் றன்மைகளை மாயா தத்துவங்களுக்குக் கொடுத்துக்கொண்டு நிற்கும். ஆக இது அகப்பூதபேதம். ஆக இது பதி பூத பேதமென்றறிக.

கஉ. பதி தனுப்படைத்தல்.

பதி தனுப் படைத்தலாவது, பதி மாயையினாலே சரீரத்தைப் படைக்கு மிடத்துத் தம்முடைய நினைவின்படி படைப்பாரோ? பசுவின் நினைவின்படி படைப்பாரோ? தம்முடைய நினைவின்படி படைப்பாராகில் எல்லாத் தனுவும் ஒரு படித்தாகவே படைக்கவேண்டும்; பசுவின் நினைவின்

படி படைக்கவேண்டுமோனல் பசுவுக்குத் தானுக வொன்றையு மறியுந் தன்மையில்லை. இவ்விரண் டுமில்லாததால் இனிச் சித்தாந்த மெப்படியென் னில், பதி மலசத்தியை யடக்கும் பிராரத்தத்துக் கேற்ற சரீரத்தையே படைப்பார். இது எது போல வென்னில், குயவன் மண்ணையெடுத்துப் பாண்டம் வனையுமிடத்துப் பசித்துன்பத்தை யடக்கும் பதார்த்தஞ் சமைவதற்கேற்ற பாண் டத்தையே வனைவதுபோல வென்றறிக.

கஙு. பதி கன்மங் கொடுத்தல்.

பதி கன்மங் கொடுத்தலாவது, பதி ஒருவரா யிருந்து தமது சத்தியினுலே எண்ணிறந்த ஆன் மாக்களு செய்யும் ஆகாமியத்தை யறிந்து அதன் கட்டுப்பாடாகிய சஞ்சிதமெல்லாம் ஒன்ருயிருந் தும் அதில் அவரவர் கன்மத்தைத் தெரிந்தெ டுத்து அவரவருக்குப் பிராரத்தமாகப் புசிப்பிப் பார். அது எதுபோலவென்னில், ஒரு வண்ணுன் பலபேர் புடைவையை வாங்கிக் கூட்டிவெளுத்து அதில் அவரவர் புடைவையைத் தெரிந்தெடுத் துக் கொடுப்பதுபோலவும்,ஒருமாட்டுமேய்ப்பன் பலபேர் மாட்டையுங் கூட்டி மேய்த்து அவரவர் மாட்டைத் தெரிந்து பிரித்து அவரவர் வீட்டிற் கொண்டுபோய் விடுவதுபோலவு மென்றறிக.

கச. பதி மலங் கழித்தல்.

பதி மலங் கழித்தலாவது, பதி பசுவோடு இருக்கின்ற ஆணவ மலத்தை மாயா கருவியை யுங் கன்மத்தையுங் கூட்டிப் போக்குவர். இது

எதுபோல வென்னில், வண்ணான் புடைவை யுடனே யிருந்த அழுக்கைப் போக்குகிறதற்கு ஒரு பாத்திரத்தில் உவர்மண்ணைக் கரைத்துப் புடைவையிலே யூட்டி அழுக்கைப் போக்கு கிறதுபோல வென்றறிக.

கரு. பதி ஞானசாரியர் மூர்த்தம்.

பதிஞானசாரியர் மூர்த்தமாவது, பதிபிறவா முதல்வ னானதால் பரவிந்துவாகிய திருவருளே உண்மை வடிவாகத் திருமேனிகொண்டு ஆன்மா வின் வழித்தாக ஒத்தொழுகித் திரிபதார்த்த சுபாவத்தை யநுக்கிரகம் பண்ணித் தெளிவித் துத் திருவடிகளிலே சேர்ப்பிக்க வெழுந்தருளும். இது எதுபோல வென்னில், விரகறியாக் குழந் தைப் பெண்ணைக் கலியாணம் பண்ணிவைத் திருந்த மாப்பிள்ளை, பெண்ணின் பக்குவகாலம் பார்த்து வந்து செய்யவேண்டிய சடங்கெல்லாஞ் செய்து அவளிணங்கும்படிக்குள்ள லீலைகள்செய் து அக்காலம்வரையும் அவளறியாத வின்பத் தைக்கொடுத்து அந்த இன்பத்தில் அவளை முழு குவிப்பன். இதுபோலவென்றறிக.

கசு. பதிகிருத்திய நித்தியம்.

பதிகிருத்திய நித்தியமாவது, பஞ்சகிருத்தி யம் நித்தியமோ? அநித்தியமோ? ஒடுங்கிப்போ கிற மலத்தைத் தீர்க்கவந்த பிரபஞ்சமும் அந்த மலத்துடனே யொடுங்கிப் போகாமல் நித்தியமா யிருப்பதேதென்னில், மலமுடைய பசுக்களெண் ணிலாததால் கிருத்திய நித்தியம். இது எதுபோல

வென்னில், தீர்ந்துபோகிற வியாதிக்குச் செய்யும் வைத்தியம் வியாதியுடனே ஒடுங்கிப்போகாமல் பிணியாளர் பலராதலால் வைத்தியமொடுங்காது. இதுபோல வென்றறிக.

கஎ. பசு மூவகைத்தன்மை.

பசு மூவகைத்தன்மையாவது, பசு விஞ்ஞான கலர் பிரளயாகலர் சகலர் என மூவகைத் தன்மை. அதிற் சகலர் தன்மையாவது, சகலர்க்கு ஆணவ மலம் கன்மமலம் மாயாமலமும் பந்தம். இவர் களுக்கு ஆணவமலம் முழுவாசியுந் திருவருள் அணுவாகவு மிருக்கும். இவர்கள் மும்மல மயக்க முடையவ ராதலின் மூன்று மலத்தார். இந்த மூவகை மயக்கங்களினாலே ஆகாமிய மெழுந்து வெகுகாலஞ் சனன மரணப்பட்டு இன்பதுன்பம் புசித்து அதனால் யானெனதென்ப திரண்டுந் தீர்ந்து பின்பு கர்த்தா மானிடவடிவாக வெழுந் தருளி யநுக்கிரகிப்பதால் வேருங் கிழங்குமற் றுத் திருவடியிலே ஒன்று படுவார்கள். இனிப் பிரளயாகலர் தன்மையாவது, பிரளயாகலருக்கு ஆணவமலமுங் கன்மமலமுமாகிய விரண்டு மல முமே பந்தம். அதனால் இவர்களுக்கு ஆணவ மலத்தின் சத்தி யரைவாசியுஞ் சிற்பரமாகிய திரு வருள் அரைவாசியுமாகவிருக்கும். இவர்களுக்கு ஆணவமல மயக்கமுங் கன்மமல மயக்கமுமே யல்லது மாயைமல மயக்கமில்லை. மற்றவிரண்டு மலமயக்கங்களினாலே ஆகாமியமெழுந்து சிறிது காலஞ் சனன மரணப்பட்டு இன்பதுன்பம் புசி த்து அதனால் யானெனதென்ப திரண்டுந் தீர்ந்து

பின்பு கர்த்தா மான்மழு சதுர்ப்புயத்துடனே தேவவடிவாக வெழுந்தருளி அனுக்கிரகிப்பதால் வேருங் கிழங்கு மற்றுத் திருவடியிலே யொன்று படுவார்கள். இனி விஞ்ஞானகலர் தன்மையாவது, விஞ்ஞானகலருக்கு ஆணவமல மொன்றுமே பந்தம். இந்த ஆணவமலத்தின் சத்தி கால்வாசியுஞ் சிற்பரமாகிய திருவருள் முக்கால்வாசியுமாக விருக்கும். இவர்களுக்கு இந்த ஆணவமல மயக்கமே யல்லது மாயாமல கன்மமல மயக்கமில்லை. மற்ற ஆணவ மலத்தினாலே ஆகாமியம் ஏழாமல் சனனப்படாமல் ஒரு சரீரத்திலே கர்த்தா கட்டளை யிட்டருளின பிராரத்தத்தைப் புசித்து அதனால் யானெனதென்ப திரண்டுந் தீர்ந்து பின்பு கர்த்தா அறிவே சொரூபமாக உள்ளத்தினுள்ளே யெழுந்தருளி அநுக்கிரகிப்பதால் வேருங் கிழங்குமற்றுத் திருவடியிலே யொன்று படுவார்கள். ஆக இது பசு மூவகைத் தன்மையென்றறிக.

கஅ. பசு பல.

பசு பலவாவது, ஒரு பசுவின் றன்மையைப் போல ஒரு பசுவின்றன்மை யிராததால் பசு பல வென்றறிக.

கக. பசு அறிவுளன்.

பசு அறிவுளனாவது, பசுவுக்கு அறிவுண்டோ இல்லையோ வென்னில், பசு தானே யறியமாட்டாதவனாகையால் பதிக்கே யறிவல்லாமல் பசுவுக்கு அறிவில்லையென்னில், பசுவுக்குப் பிறப்

பிறப்பும் நரக தண்டனையும் வேதாகமங்களில் விதிவிலக்குச் சொல்லவேண்டியதும் இல்லையாம். இனிச் சித்தாந்த மெப்படியென்னில், பதிதானே யறிவிக்கு மறிவுளன். பசு அறிவித்தாலறிகின்ற கிஞ்சிஞ்ஞனென்னு மறிவையுளன். இது எது போலவென்னில், காட்டு மொளியுடைய சூரியனும் காணு மொளியுடைய கண்ணும்போல வென்றறிக.

உ0. பசு சேர்ந்தவன்னம்.

பசு சேர்ந்த வன்னமாவது, பசு மலத்தோடு கூடினால் மலபோதமாய் நிற்கும்; சிவத்தோடு கூடினால் சிவபோதமாய் நிற்கும். அது எதுபோல வென்னில், ஆகாயமானது இருளோடு கூடினால் இருளாய் நிற்கும்; ஒளியோடு கூடினால் ஒளியாய் நிற்கும்; அதுபோலவென்றறிக.

உக. பசு உடல் பற்றல்.

பசு உடல் பற்றலாவது, வியாபகமா யிருக்கின்ற ஆன்மா பதி எந்தப் புவனத்திலே சரீரத்தைக் கொடுத்தாலும் பற்றிக்கொள்ளும். அது எதுபோல வென்னில், படிகமலையில் எந்தப் புறத்திலே வன்னத்தைக் கொடுத்தாலும் பற்றிக் கொள்ளும்; இதுபோல வென்றறிக. அக்கினி மலையிலே எந்தப் புறத்திலே பஞ்சைக் கொடுத்தாலும் பற்றிக்கொள்வது போலவுமாம்.

உஉ. பசுவுக்குக் கிருத்தியம்.

பசுவுக்குக் கிருத்தியமாவது,பஞ்சகிருத்தியம் பசுவுக்கோ? சரீரத்துக்கோ? பசு நித்தியமான

தால் பசுவுக் கில்லையாம். சரீரஞ் சடமாகையால் சரீரத்துக்கு மில்லையாம். இனிச் சித்தாந்த மெப்படியென்னில், சிருட்டி திதி சங்காரம் இந்த மூவிதப்படுஞ் சரீரத்தின் வழித்தாய்த் திரோபவம் அநுக்கிரகத்தைப் பசு அனுபவிக்கையால் பசுவுக்கே பஞ்சகிருத்தியம். இது எதுபோலவென்னில், ஒருவன் ஒரு மரத்தின் பழத்தைமட்டும் புசிக்க வுடையவனானாலும் அந்த மரம் இலை பூ காய் இந்த நாலுக்கும் உடையவனானதுபோலவென்றறிக.

௨௩. பசுவைக் கிருத்தியப்படுத்தல்.

பசுவைக் கிருத்தியப் படுத்தலாவது, பதி பசுவுக்கு அறிகருவியை யுண்டாக்குதலே சிருட்டி. அறிகருவிக் காதியாகிய மனதை நிலை நிறுத்தலே திதி. அறிகருவியை நீக்குதலே சங்காரம். அறிதற் றொழில் நிகழுமிடத்து இன்பதுன்பங்களைக் கொடுத்து அதில் அறியாமையைச் செய்தலே திரோபவம். அறிதற் றொழில் நிகழுமிடத்து அநுக்கிரகம். இது கிருத்தியப் படுத்தலென்றறிக.

௨௪. பசு பிரபஞ்ச முதல்வன்.

பசு பிரபஞ்ச முதல்வனாவது, பிரபஞ்சத்திற்குப் பதி முதல்வனோ? பசு முதல்வனோ? பதி முதல்வனென்னில், ஆதியிற் சிருட்டித்த ஒரு தனுவிலே கொடுத்த பிராரத்தத்தினாலே ஆணவ மலத்தைத் தீர்த்துத் தமது திருவடி சேர்ப்பிக்க வேண்டும். அப்படியின்றி எண்ணிறந்த காலங்

தனுவைக் கொடுத்தலால், பதி முதல்வனன்று. பிரபஞ்சம் வர்த்திக்கும்படியாயுள்ள மலசத்தியாகிய அவாவையுடையவன் பசுவானதால், பசுவே பிரபஞ்சத்துக்கு முதல்வன். இது எதுபோலவென்னில், குருடுபோலும் மலசத்தி; குருடன் போலும் பசு; கோல்போலுஞ் சரீரம்; கோல் கொடுப்பவன்போலும் பதி; குருடனுக்குப் போகவேண்டிய இடத்துக்கே கோல் கொடுப்போன் இரங்கிச்செல்லுதலால், நடக்குந் தொழிலுக்கு முதல்வன் குருட னென்றறிக.

உரு. பசுவின் பிறப்பு.

பசுவின் பிறப்பாவது, நித்தியமா யிருக்கிற பசுவுக்குப் பிறப்பிறப் பேதென்னில், பசு மாயாகருவிகளைப்பற்றி அறிதலே பிறப்பு. மாயாகருவிகளை விட்டு நீங்கின அறியாமையே இறப்பு. இது எது போலவென்னில், ஒரு ஊரிலே எக்காலமுங் குடியிருக்கிற ஒருவன் அந்த ஊரை மணியம் பெற்ற பொழுது, இந்த ஊருக்கு மணியகாரன் வந்தானென்றும், மணியம் மாறினவுடனே இந்த வூருக்கு மணியகாரன் போய்விட்டானென்றும் பேர் பெறுதல்போ லென்றறிக.

உசு. பசு அறிதொழில் கெடுதல்.

பசு அறிதொழில் கெடுதலாவது, பசு-க. பசுஞானம்-க. பசுஞானத்துக்கு அறியுங் குணம்—க. பசுஞானத்துக்கு அறியுந்தொழில்—க. ஆக—ச. ஆணவமலம்—க. சரீரம்—க. இன்பதுன்பம்—க. இந்தச் சரீரத்தையும் இன்பதுன்பத்தையும் உண்டு

பண்ணின பதி-க. ஆக-ச. ஆகவகை-உ-க்கு-அ. அதில் மருட்காலம் சரீரமும் அறிதொழிலுமே யழிந்தது. ஆக அழிந்தபொருள்-உ. இருந்த பொருள்-சு. இது எதுபோலவென்னில் கண்-க. கண்ணொளி - க. கண்ணொளிக்குக் காணுங் குணம்-க. கண்ணொளிக்குக் காணுந்தொழில்-க. ஆக-ச. இருள்-க. விளக்கு-க. பதார்த்தம்-க. விளக்கையும் பதார்த்தத்தையும் உண்டாக்குவது-க. ஆக-ஏ. ஆகவகை உ-க்கு-அ. அதில் எண்ணெய் அற்றுப்போன விடத்தில் விளக்குங், கண்ணொளிக்குக் காணுந் தொழிலுமே யழிந்தது. ஆக அழிந்த பொருள்-உ. இருந்தபொருள்-சு. இது போலவென்றறிக.

உஎ. பசுவின் ஆறவத்தை.

பசுவின் ஆறவத்தையாவது, கேவல சகல சுத்தமென்னும் மூன்றவத்தையும் காரணகாரியமாக ஆறுவகைப்படும். அவற்றுள் காரண கேவலமாவது, அநாதி முதல் மோக்ஷவரை ஆன்மாத் தனது ஞானத்துக்கு அறியுந் தொழில் கெட்டு அறியுங் குணங்கெடாமல் ஆணவமலத்தில் அழுந்திக் கிடத்தல். இது எதுபோலவென்னில், கண்ணானது தனது ஒளிக்குக் காணுந் தொழில்கெட்டுக் காணுங் குணங் கெடாமல் இராவிருளில் விழித்திருத்தல்போல. இது காரணகேவலம். இனிக் காரிய கேவலமாவது, ஆன்மா அறிகருவிகள் நீங்கிச் சாக்கிரமுதல் அதீதவரையுள்ள அஞ்சவத்தைப்படுதல் காரிய கேவலம். இனிக் காரண

சகலமாவது, ஆதி சிருட்டி முதல் மோக்ஷவரை யுள்ள எண்ணிறந்த சிருட்டிகாலங்களிலே மாயா சரீரங்களை அவாவென்னும் அருவினையாற் பற்று தல். இது எதுபோலவென்னில், கண்ணனது தன தொளிக்குக் காணுந்தொழில் கெட்டுக் காணுங் குணங் கெடாமல் இராவிருளில் விழித்திருக்கிற போது, விளக்கைக் கண்டு விளக்கொளியைப் பொருந்தல்போல. இது காரண சகலம். இனிக் காரிய சகலமாவது, கேவலப்பட்டுக் கிடக்கும் ஆன்மா துரியாதீத முதற் சாக்கிரவரையுள்ள அஞ்சவத்தைப் படுதல். இது காரிய சகலம். இனிக் காரண சுத்தமாவது, ஆதி சிருட்டிமுதல் மோக்ஷவரையுள்ள எண்ணிறந்த சிருட்டி காலங் களிலே மாயா சரீரங்களைப்பற்றி நிற்குங்காலம் திருவருளே மானிட வடிவுகொண்டு வந்ததென் று மலசகித வாடையினாலே அறியாமல் அந்தத் திருமேனி வாடையி லகப்பட்டு அபுத்தி பூருவமா கவும் மனப்பூருவமென்னும் புத்தி பூருவமாகவுஞ் செய்யப்பட்ட சரியை கிரியை யோகம் ஞான மென்னும் நாலு சிவபுண்ணியமும் உபாய உண் மையென்ன எட்டானதில் உண்மை ஞானம் ஒன்று நீங்கலாக நின்ற ஏழு சிவ புண்ணியத்தி னும் முயன்று பஞ்ச மலங்களையும் நீக்குதல். அது எதுபோலவென்னில், கண்ணனது தன தொளிக்குக் காணுந்தொழில் கெட்டுக் காணுங் குணங் கெடாமல் இராவிருளில் விழித்திருக்கி றதுபோல, விளக்கைக் கண்டு விளக்கொளியைப் பொருந்தி நின்று பதார்த்தங்களைத் திரிவு காட்சி

யாகக் கண்டு நிற்கிறபோது, ஆதித்த வுதயமான வுடனே இருளையும் விளக்கையும்விட்டு நீங்கி, அந்தக் கண்ணொளி, கண் கூச்சத்தினுடனே ஆதித்த கிரணத்தைக் கலந்து பதார்த்தங்களைத் திரிவறக் காண்டல்போலும். இது காரணசுத்தம். இனிக் காரிய சுத்தமாவது, நின்மல சாக்கிரமுதல் அஞ்சவத்தையும் பொருந்துதல். ஆக இது பசுவின் ஆறவத்தை யென்றறிக.

உஅ. பசுவின் காரிய அவத்தைவகை.

பசுவின் காரிய அவத்தைவகையாவது, காரிய கேவலம் காரிய சகலம் காரிய சுத்தமென மூன்ரும். அவற்றுள் கீழாம் அவத்தையாகிய காரிய கேவல வகையாவது, சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம் என்று-ரு. அதில் சாக்கிர அவத்தையாவது, ஞானேந்திரியங்கள்-ரு. கன்மேந்திரியங்கள்-ரு. தன்மாத்திரை-ரு. அந்தக்கரணம்-ச. உள்ளம்-க. வாயுக்கள்-கO. கன்மேந்திரிய காரியங்கள்-ரு. ஆக-நரு கருவிகளுடனே வந்து நின்று அறிவு கலக்கமாக விருக்குமவதரம் சாக்கிரம். இனிச் சொப்பன அவத்தையாவது, ஞானேந்திரியங்கள்-ரு. கன்மேந்திரியங்கள்-ரு. ஆகப் பத்துக் கருவிகளும் இலாடத்தானத்தில் நிற்க மற்ற-உரு கருவிகளுடனே கண்டத்தானத்தில் வந்து நின்று அறிவு கெட்டிருக்கு மவதரம் சொப்பனம். சுழுத்தியவத்தையாவது தன்மாத்திரைகள்-ரு. சித்தம் நீங்கலாக அந்தக்கரண மூன்று. பிராணன் நீங்கலாக வாயுக்

கள்—கூ. கன்மேந்திரிய காரியங்கள்-ரு. ஆக-உஉ கருவிகளும் கண்டத்தானத்தில் நிற்க, மற்ற மூன்று கருவிகளுடனே இருதயத்தானத்தில் வந்து நின்று, சரீரம் அயர்ந்தும் அயராமலும் இருப்பது சுழுத்தி. இனித் துரிய அவத்தையாவது, சித்தம் ஒன்று இருதயத்தானத்தில் நிற்க, மற்ற இரண்டு கருவிகளுடனே நாபித்தானத்தில் வந்து நின்று, பிராணவாயு அதிக நடையாக விருப்பது துரியம். இனித் துரியாதீத அவத்தையாவது, பிராணன் ஒன்று நாபித்தானத்தில் நிற்க, மற்ற உள்ளம் ஒன்றுடனே மூலத்தானத்தில் வந்து நின்று, பிராண னியக்க மில்லாதிருப்பது துரியாதீதம். ஆக இப்படிக் கீழாம் அவத்தையாகிய காரிய கேவல அவத்தை வகை-ரு. இனி மத்தியாம் அவத்தை யாகிய காரியசகலவகையாவது, துரியாதீதம் துரியம் சுழுத்தி சொப்பனம் சாக்கிரம் ஆக-ரு. இந்தப் பஞ்ச அவத்தையாவன, அப்படி அதீதப்பட்டுக் கிடக்கும் அவதரத்தில் சிவத்துக் கபின்னமாகிய சத்தி, விந்து நாதத்தி னிடமாக நின்று சொல்லுதற் கரிதாகிய அறிவாய்ப் பிரகாசமாய், ஆன்மாவுக்குள்ள கன்மத்தைப் புசிப்பிக்க வேண்டி மூலத்தானத்தில் ஒரு நாதமாகிய சூக்குமையைக் காரியப்படுத்த, அந்தச் சூக்குமையெழுந்து நாபித்தானத்தின் வந்துபொருந்தும். இனிச் சதாசிவன் சாதாக்கிய தத்துவத்தி னிடமாக நின்று நாபித்தானத்திற் பைசந்தியைக் காரியப்படுத்த, அந்தப் பைசந்தி வெவ்வேருய அக்கரங்களை பொழுங்குபடத் தோன்றுத லுண்டாகும்படி

மயின் முட்டைக்குட் சலத்தில் பல வன்னங்க ளும் உருத்தெரியாமல் நின்றாற்போல ஒடுங்கி, இருதயத்தானத்தில் வந்து உணர்வு மாத்திரமாய் உருத்தெரியாமல் நிற்கும். இனி மகேசுரன் ஈசுர தத்துவத்தினிடமாக நின்று இருதயத்தானத்தில் மத்திமையைக் காரியப்படுத்த, இந்த மத்திமை, பிராணவாயுவுடனே பொருந்தி வருகின்ற அவ் வக்கர சொரூபங்க ளெல்லாவற்றையும் ஒழு ங்குபட நிறுத்தி, இந்திரியங்களுக்கு முற்பட்டு வரும் செவிக்குக் கேளாமல் உள்ளே யறிவதா கிய தொனியாகக் கண்டத்தானத்தில் வந்து பிற க்கும். இனி உருத்திரன் சுத்தவித்தை தத்துவத்தி னிடமாக நின்று கண்டத்தானத்தில் வைகரியைக் காரியப்படுத்த, அந்தவைகரி,உதானவாயுவானது சுழுமுனையிற் சேரும் பிராண வாயுவோடுங் கூடு தலால் வந்த சத்தமானது சொல்லுவோன் செவி க்குக்கேட்க அவன் நினைத்த பொருள்களைச் சொல்லும். ஆக இவை நாலு வாக்கின் காரியப் பாடு. இப்படி வாக்குகள் நான்கினுலும் உணரும் ஆன்மா, சகல அவத்தைக் கருவியைப் பொருந்தி வருகின்ற தெப்படியென்னில், பராசத்தி யநுக் கிரகத்தினலே அசுத்தமாயா தத்துவமாகிய கலை ஆன்மா விடயங்களைப் பொருந்தும்படிக்கு மூலத் தானத்தில் ஆன்மாவுக்கு ஆணவமலத்தைச் சிறி து நீக்கும். இது துரியாதீத அவத்தை. ஆன்மா இந்தக் கலையே வடிவாக நாபித்தானத்தில் வந்து பிராணவாயுவைக் கூடுவன். இது துரிய அவத் தை. ஆன்மா இந்தப் பிராணவாயுவைக் கூடி

இருதயத்தானத்தில் வருவன். இந்த இருதயத் தானத்தில் அந்த விடயங்களைப் புத்தி தத்துவம் நிச்சயித்து ஆன்மாவுக்குக் கொடுக்கின்றபோது, வித்தை தத்துவமானது ஆன்ம ஞானத்துக்கும் புத்தி தத்துவத்துக்கு மிடையிலே நின்று விட யங்களை யறியுந்தொழில் ஆன்மா பொருந்தும் படிக்கு ஆன்மாவுக்கு அறிவை யெழுப்பும். இனி அராக தத்துவம் ஆன்மாவுக்குப் பெற்ற வின்ப போகத்தினுள்ள ஆசையைச் சிறிதாக்கிப் பெறு த வின்ப போகத்தில் ஆசையைப் பெருகப்பண் ணிக்கொண்டு நிற்கும். நியதி தத்துவம் அரச ஞஞ்ஞைபோல ஆன்மாவுக்குக் கன்மத்தை நிச் சயித்து நிறுத்திக்கொண்டு நிற்கும். காலதத்து வம் நிகழ்காலத்துப் பலத்தினையும் கழிகாலத் தெல்லையினையும் எதிர்காலத்துப் புதுமையினை யும் ஆன்மாவுக்குப் பொருத்திக்கொண்டு நிற்கும். ஆக இந்தத் தத்துவங்களைக் கர்த்தாவினுடைய சத்திபொருந்தி இப்படிச்செய்விக்க இந்தக்கலாதி ஞானங்களால் ஆன்மா விடயங்களைப் புருடமாக நின்று பற்றும். ஆன்மா இந்தப்படி இச்சாஞானக் கிரியா சொரூபனைப் பொதுமையில் நின்ற அவ தரம் ஆன்மாவுக்குப் பஞ்சகஞ்சுக னென்றும் புருட தத்துவனென்றும் பெயர். இப்படிப் புருட தத்துவனான அவதரத்தில், பிரகிருதி குணரூப மாய் ஆன்மாவைக் கூட, ஆன்மாவுக்கு மிகுந்த குணமே வடிவாய் மேவிநிற்கும் அவதரத்திற், புத்தி தத்துவமானது ஆன்மாவுக்கு விடயங்க ளைப் புசிப்பிக்கவேண்டி கூ௰௫—பாவகமாக நிச்ச

யம்பண்ணிக்கொண்டு நிற்கும். அகங்கார தத்துவமானது ஆன்மா புசிக்கவேண்டி இந்திரியங்களுக்கு முற்பட்டுக்கொண்டு நிற்கும். மன தத்துவமானது ஆசையே சொரூபமாக ஒன்றைச் சங்கற்பிக்கையாகிய நினைவும் அநவரத நடையும் ஆன்மாவுக்குக் கொடுத்துக் கொண்டு நிற்கும். சித்த தத்துவமானது மனதத்துவ நினைவில்வந்து ஆன்மாவுக்குச் சந்தேகத்தைக் கொடுத்துக்கொண்டு நிற்கும். ஆக இது சுழுத்தியவத்தை. ஆன்மா இவற்றுடனே கண்டத்தானத்தில் வருவன். இந்தக் கண்ட சொப்பனத்தில் சாக்கிரத்திலே புசிக்குந் தன்மைபோலப் புசித்தாலும் புசிப்பன். இது சொப்பன அவத்தை. ஆன்மா இந்தப்படி இலாடத்தானத்திலும் வருவன். இந்த இலாடத்தானத்திற் புசிக்கு முறையாவது, ஆகாசத்தினின்று சோத்திரத்தைப் பொருந்திச் சத்தத்தையறியும். அதனால் வாக்கு வசனிக்கும். வாயுவில் நின்று துவக்கைப் பொருந்திப் பரிசத்தை யறியும். அதனாற் பாதம் கமனிக்கும். தேயுவினின்று சக்ஷுவைப் பொருந்தி யுருவத்தையறியும். அதனாற் பாணி தானஞ் செய்யும். அப்புவினின்று சிங்குவையைப் பொருந்தி யிரதத்தை யறியும். அதனாற் பாயுரு விசர்க்கத்தைப் பிரித்துவிடும். பிருதிவியினின்றும் ஆக்கிராணத்தைப் பொருந்திக் கந்தத்தையறியும். அதனால் உபத்தம் ஆனந்தத்தைவிடும். இது சாக்கிர அவத்தை. இப்படிப் பராசத்தி யநுக்கிரகத்தினாலே பொருந்தப்பட்ட மாயா தத்துவங்களுடனே ஆன்மாக் கூடி மயங்கிச்

சனன மரணப்படும். இவற்று ளான்மாப் பொருந்தும் சகலத் தசநிலை வகையாவது, ஒன்றினுலுஞ் செல்லாதாதல், பலவினுஞ்சென்று ஒன்றுதோன்ருதாதல், இந்திரியமவுனம், இன்பப்படுதல், துன்பப்படுதல், இன்பத்திற் சிரிப்பு, துன்பத்தி லழுகை, இரக்கம், கோபம், கிரிஷய, ஆகப் பத்து. இவற்றுள், ஒன்றினுலுஞ்செல்லாதாதலாவது, சிவமாதியைவருஞ் சிவ தத்துவங்களினின்று வாக்குக்களைக் காரியப்படுத்தப், பராசத்தி யநுக்கிரகத்தினுலே கலை ஆணவத்தைச் சிறிது நீக்க, ஆன்மா கலையே வடிவாய் அருளாகித் துரியத்தில் நின்று பிரகிருதியைப் பொருந்தித் திகைத்து நிற்றல்-க. பலவினுஞ் சென்று ஒன்று தோன்ருதாதலாவது, சிவமாதி ஐவரும் சிவதத்துவங்களினின்று வாக்குக்களைக் காரியப்படுத்தப், பராசத்தி யநுக்கிரகத்தினுலே கலாதிகளான பஞ்ச கஞ்சுகனுய ஆன்மா, அருளை மருளைச்சார்ந்து சுழுத்தியினின்று மனத்தைப் பொருந்தி நினைத்து விடுதல்-உ. இந்திரிய மவுனமாவது, சிவமாதி ஐவரும் சிவ தத்துவங்களினின்றும் வாக்குக்களைக் காரியப்படுத்தப், பராசத்தி யநுக்கிரகத்தினுலே கலாதிகளான பஞ்சகஞ்சுகனுய ஆன்மா, அருளை மருளைச் சார்ந்து சுழுத்தியினின்று அந்தக்கரணத்தைப் பொருந்திச் சிந்தித்தல்—ங. இன்பப்படுதலாவது, சிவமாதி ஐவரும் சிவதத்துவங்க்ளினின்று வாக்குக்களைக் காரியப்படுத்தப், பராசத்தி யநுக்கிரகத்தினுலே பஞ்சகஞ்சுகனுய ஆன்மா, அருளை மருளைச்சார்ந்து சொப்பன சாக்கிரத்தினின்று அந்

தக்கரணத்தைப் பொருந்தித், திரிகால செல்வம், பிறவுபகாரம், புகழ்,புண்ணியமுதலியவற்றிலும், பஞ்சபூதங்களினின்று ஞானேந்திரியத்தின் வழித்தாய் இன்பவிடயத்திலும், பற்றியழுந்தல்—௪. துன்பப்படுதலாவது, சிவமாதி ஐவரும் சிவதத்துவங்களினின்று வாக்குக்களைக் காரியப்படுத்தப், பராசத்தி யநுக்கிரகத்திஞலே கலாதிகளான பஞ்சகஞ்சுகனுய ஆன்மா, அருளை மருளைச் சார்ந்து சொப்பன சாக்கிரத்தி னின்று அந்தக்கரணத்தைப் பொருந்தித்,திரிகாலதரித்திரம்,பசிப்பிணி, பிறவிடுக்கண், இகழ்ச்சி, புண்ணிய விழப்பு முதலியவற்றிலும், பஞ்சபூதங்களினின்று ஞானேந்திரியத்தின் வழித்தாய்த் துன்பவிடயத்திலும், பற்றியழுந்துதல்—௫. இன்பத்திற் சிரிப்பாவது, சிவமாதி ஐவரும் சிவதத்துவங்களினின்று வாக்குக்களைக் காரியப்படுத்தப்,பராசத்தி யநுக்கிரகத்திஞலே கலாதிகளான பஞ்சகஞ்சுகனுப ஆன்மா, மருளைச்சார்ந்து அருளாகியும், சொப்பன சாக்கிரத்தினின்று அந்தக்கரணத்தைப் பொருந்தித், தன்குற்றம் பாராது பிறர் குற்றம் பார்த்து மகிழ்தல்—௬. துன்பத்தி லழுகையாவது, சிவமாதி ஐவரும் சிவதத்துவங்களினின்று வாக்குக்களைக் காரியப்படுத்தப், பராசத்தி யநுக்கிரகத்திஞலே கலாதிகளான பஞ்சகஞ்சுகனுய ஆன்மா, அருளை மருளைச் சார்ந்து சொப்பன சாக்கிரத்தினின்று பிறர் குற்றம் பாராது தன் குற்றத்தையும் தனது திரிகால வின்ப விழப்பையும் பார்த்துச் சகியாதழுதல்—௭. இரக்கமாவது, சிவமாதி ஐவரும் சிவதத்

துவங்களினின் றுவாக்குக்களைக்காரியப்படுத்தப், பராசத்தி யநுக்கிரகத்தினாலே கலாதிகளான பஞ் சகஞ்சுகனாகிய ஆன்மா, அருளை மருளைச் சார்ந்து சொப்பன சாக்கிரத்தினின்று புத்தியைப் பொருந்திப், பிறர் துன்பங்கண்டு சகியாதாதல்—அ. கோபமாவது,சிவமாதி ஐவரும் சிவதத்துவங்களினின்று வாக்குக்களைக் காரியப்படுத்தப், பராசத்தி யநுக்கிரகத்தினாலே கலாதிகளான பஞ்சகஞ்சுகனாய ஆன்மா,மருளாகியும்அருளைச்சார்ந்து மருளாகியும் சொப்பன சாக்கிரத்தினின்று அகங்காரத்தைப் பொருந்தி மேலிடுதல்—கூ. கிரியையாவது, சிவமாதி ஐவரும் சிவதத்துவங்களினின்று வாக்குக்களைக் காரியப்படுத்தப், பராசத்தி யநுக்கிரகத்தினாலே கலாதிகளான பஞ்சகஞ்சுகனாய ஆன்மா, அருளைச்சார்ந்து சொப்பன சாக்கிரத்தினின்று அந்தக்கரணத்தைப் பொருந்தி, வாக்காதி வழித்தால் வசனாதி செய்தல்—க0. ஆக இப்படிக் காரிய சகலத் தசநிலை.

இனிச் சுத்தாவத்தையாகிய காரிய சுத்தாவத்தையாவது, இப்படிக் கேவல சகலத்தைப் பொருந்திச் சனனமரணப்பட்ட காலத்து, மலபரிபாக கன்ம ஒப்பு வந்தவிடத்து, ஞானாசாரியரநுக்கிரகத்தினாலே தசகாரியமாகிய தத்துவரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்மரூபம் ஆக—ச நின்மல சாக்கிரம். ஆன்மதரிசனம், சிவரூபம் ஆக—உ நின்மல சொப்பனம். நின்மல சுழுத்தியில் அருள் செய்யுங் கிருத்தியம் யான் செய்வேனென்று கருதல் மாத்திரமே யல்லாது

தசகாரியத்தி லடங்குவ தொன்றுமில்லை. ஆன்ம சுத்தி, சிவதரிசனம், சிவபோகம் ஆக—௩ நின்மல துரியம். சிவபோகம் நின்மல துரியாதீதம். ஆக இப்படிக் காரிய சுத்தாவத்தை—௫. ஆகக் காரிய அவத்தை மூன்றென்றறிக.

உகூ. பசுநடை யெட்டு.

பசுநடை யெட்டாவது, அருள் நடை—௪. மருள் நடை-௪. ஆக-௮. அதில் அருள் நடை-௪-க்கு வகை. அருள்நடையி லகநடை. இதன் அநுபவம் இரங்கல்-க. அருள் நடையிற் புற நடை. இதன் அநுபவம் நல்வசனம், நற்றொழில்-உ. மருள் மறைவி லருள் நடையி லகநடை. இதன் அநுபவம் ஏனாதிநாதநாயனார் செயல்-௩. மருள் மறைவி லருள் நடையிற் புறநடை. இதன் அநுபவம் எறிபத்த நாயனார் செயல்—௪. ஆக அருள் நடை நாலுஞ்சரி. இனி மருள்நடை ௪-க்குவகை. மருள் நடையி லகநடை. இதன் அநுபவம் பொறுமை-க. மருள் நடையிற் புறநடை. இதன் அநுபவம் தீமையுரையும்தீமைத்தொழிலும்-உ. அருள் மறைவில் மருள் நடையில் அகநடை. இதன் அநுபவம் * கூடாவொழுக்கத்திற் "புறங்குன்றி" ௩. அருள் மறைவில் மருள் நடையிற் புறநடை. இதனநுபவம் பெரிய புராணத்தில் அதிசூரன் செ

* திருவள்ளுவர் குறள் உ௮-ம் அதிகாரம் கூடாவொழுக்கம் "புறங்குன்றி கண்டனைய ரேனு மகங்குன்றி மூக்கிற் கரியா ருடைத்து."

யல்-௪. ஆக மருள் நடை-௪. ஆக இருவகையில் பசுநடை யெட்டென்றறிக.

௩.0. மும்மல மயக்கம்.

மும்மல மயக்கமாவது, ஆணவம் மாயை கன்மம் என்னும் மும்மல மயக்கம். அதில் ஆணவமல மயக்கமாவது, தான் செயலற்றவனே யானே திறவானென்றுந், தனதல்லாத தேகாதி பிரபஞ்சங்களைத் தனதென்றுங் கொள்வது ஆணவமல மயக்கம். இனிக் கன்மமல மயக்கமாவது,கர்த்தாவினுலே பஞ்சவிடயங்கள் இன்பதுன் பமாய் வந்து பொருந்துகின்றதைத், தனதுமுயற் சித் திறத்தினுலே இன்பம் வந்ததென்றும், தன் முயற்சித் திறக்கேட்டினுலே துன்பம் வந்ததென் றுங் கொள்வது கன்மமல மயக்கம். இனி மாயைமல மயக்கமாவது, தனக்கு அந்நியமான தேகத்தில் வந்து பொருந்துகின்ற பூச்சிய அபூச் சியத்தைத் தனக்கே வந்து பொருந்துகின்றதா கக் கொள்வது மாயைமல மயக்கம். ஆக இந்த மும்மல மயக்கமும் பெத்தகாலத்தில் இப்படி மயக்கியும் முத்திகாலத்தில் மயக்காமலும் நிற் கும். இந்த மும்மலமும் பசுவை இப்படி மயக்கி யும் மயக்காமலும் நிற்பது எதுபோலவென்னில், பரத்தையானவள் தான் கொடுத்த மதனலீலா விநோதத்தை மேலான விநோதமென்று தெளி ந்து நின்ற விடயனை மயக்குவள். அந்த விநோ தத்தைக் கீழான விநோதமென்று தெளிந்து நின்ற சந்நியாசியை மயக்கமாட்டாள். இதுபோல வென்றறிக.

௩௧. மலம் ஒன்று.

மலம் ஒன்றாவது, ஆணவமலம் ஏகபொருளாயிருந்து தனது சத்தியினாலே எண்ணிறந்த பசுக்க ளறிவை அக மறைப்பாக மறைக்கும். அது எதுபோலவென்னில், கள்ளுப்போலவும், இரா ஒருபொருளானது தனது சத்தியாகிய இருளினாலே எண்ணிறந்தபேர் கண்ணொளியை மறைத்தல்போலவு மென்றறிக.

௩௨. மலச் சேர்க்கை.

மலச்சேர்க்கையாவது, ஆன்மாவுக்கு ஆணவமலம் இயற்கையோ? சேர்க்கையோ? இயற்கையானால், பாலுக்கு வெளுப்பும் கரிக்குக் கறுப்பும் ஒருகாலத்திலும் நீங்காததுபோல, ஆன்மாவுக்கு ஆணவமலம் ஒருகாலமும் விட்டு நீங்காது. சேர்க்கையானால், வெள்ளைப்புடைவையில் அழுக்கேறினதுபோல, ஆன்மாவுக்கு அநாதியிலே ஆணவமலமின்றிச், சுத்தனாயிருக்க வேண்டும். இப்படியில்லாததால், இயற்கையு மன்று, சேர்க்கையு மன்று. இனிச்சித்தாந்தமெப்படியென்னில், நீங்குமியற்கையாகக் கூடியிருந்தது. இது எதுபோலவென்னில், நெல்லுக்குமியும் செம்புக்குக் களிம்பும்போல வென்றறிக.

௩௩. மல நீக்கம்.

மலநீக்கமாவது, ஞானாசாரியர் சந்நிதானப்பட்டபின் பசுவுக்கு மல நீங்குமோ? சந்நிதானப்படுமுன்னே மல நீங்குமோ? சந்நிதானப்பட்டபின் மலநீங்குமென்னில், பசு மலத்தினாற் சனன

மரணப் படுவதெல்லாந் திருமேனி கொள்ளாத குறையினாலே யென்று வரும். சந்நிதானப் படு முன்னே மலநீங்குமானால், ஞானசாரியராகத் திருமேனி கொள்ள வேண்டுவதில்லை யென்று வரும். இவ்விரண்டுமல்லாததால், இனிச்சித்தாந்த மெப்படியென்னில், ஆனந்தமென்னும் ஆணவ மலத்தின் முளை குருத்தாகிய யானெனதென்பது, சந்நிதானப் படுமுன்னே உண்மையோகம் வரை யிலுள்ள சிவபுண்ணியத்தால் நீங்கும். அந்த மலத்தின் கிழங்கு வேராகிய புகழி லவாவுந் தே காதி பிரபஞ்சத்தி லவாவும் சந்நிதானப் பட்ட பின்பு நீங்கும். இது எதுபோலவென்னில், ஒரு ராசாவானவர், தமது வெளிபரங்கமான சதுரங்க சேனையினாலே தமக்குச் சரிபலவானாகிய சத்துரு வினுடைய வெளிபரங்கமான சதுரங்க சேனை யைக் கொன்று, பின்பு தமது அந்தரங்கமான சேனையோடுந் தாமே வந்து சத்துருவையுங் கொ ன்று சத்துருவினுடைய அந்தரங்கமான சேனை யையுங் கொல்லுதல்போல வென்றறிக.

௩௪. மாயைப் பற்று.

மாயைப் பற்றுவது, ஆன்மாவுக்கு, மாயா கரு வியைப் பற்றுந்தன்மையைப் பதி கொடுத்ததோ? ஆன்மாவுக்குள்ள தன்மையோ? பதி கொடுத்தகதா கில், மோக்ஷமான காலத்திலும் கொடுக்கவேண் டும். ஆன்மாவுக்குள்ள தன்மையாகில், மோக்ஷ மாகிறகாலத்திலும் கொடுத்திருந்த தனுவைப் பற்ற வேண்டும். இவ்விரண்டு மில்லாததால், இனிச் சித்தாந்த மெப்படியென்னில், ஆணவ

மலமே ஆன்மாவுக்கு மாயா கருவியைப் பற்றுந் தன்மையைக்கொடுத்தது. இது எதுபோலவென்னில், வழிகாட்டி கொடுக்குங் கோலில் குருடனுக்குக் குருடு இச்சையைக் கொடுத்ததுபோல வென்றறிக.

௩௫. கன்ம தேட்டம்.

கன்மதேட்டமாவது, ஆன்மாவுக்குப்பிராரத்த கன்மத்தைத் தேடுந்தன்மை பதிகொடுத்ததோ? ஆன்மாவுக்குள்ள தன்மையோ? பதிகொடுத்த தன்மையாகில், மோக்ஷகாலத்திலுங் கொடுக்க வேண்டும். ஆன்மாவுக்குள்ள தன்மையாகில், மோக்ஷகாலத்திலுந் தேடவேண்டும். இவ்விரண்டு தன்மையுமில்லாததால், இனிச் சித்தாந்த மெப்படியென்னில், குழந்தைக்கு அதன் பசியே தாய் சங்கிறற் கொடுக்கும் பாலைத் தேடுந் தன்மையைக் கொடுத்ததுபோல, ஆன்மாவுக்கு ஆணவமலமே பிராரத்த கன்மத்தைத் தேடுந் தன்மையைக் கொடுத்தது. பிணியாளனுக்கு அவனுடைய பிணியே வைத்தியன் ஒரு பாத்திரத்தில் வைத்துக் கொடுக்கும் மருந்தைத் தேடுந் தன்மையைக் கொடுத்ததுபோல வென்றறிக.

௩௬. திரோதம் ஒன்று.

திரோதம் ஒன்றுவது, திரோத மொருபொருளாக விருந்து, பலபசு ஞானத்தினறியுந்தொழிலை ஒன்றுவிட்டு ஒன்றைப் புறமறைப்பாக மறைக்கிறதெப்படியென்னில், பசு ஒரு சரீரமெல்லாம் நிரம்பியிருந்து ஒருவிடயத்தைப் புசிக்குங்கால் மற

றை விடயத்தைப் புசிக்கவொட்டாமலும், ஆன்மா வியாபகமாயிருக்க ஒரு சரீரத்தைப் பற்றுங் கால் மற்றைச் சரீரங்களைப் பற்றாமலும், ஆன்மா மலபோதமாய் நிற்குங்காலம் திருவருளை அவ னவளதுவென்னும் பிரபஞ்சமாகவும், ஆன்மா சிவபோதமாக நிற்குங்காலம் அந்தப் பிரபஞ்சத் தைத் திருவருளாகவும், இப்படிச் சகல ஆன்மாக் களுக்கும் ஒருதன்மையாகத் திரைபோல மறை த்து நிற்கையால் திரோத மொன்றென்றறிக.

௩௭. மாயை யொன்று.

மாயை யொன்றாவது, மாயை யொரு பொரு ளாகவிருந்து தனது சத்தியினாலே எண்ணிறந்த பசுக்கள் கன்மத்துக்கு எண்ணிறந்த புவனங் களிலே எண்ணிறந்த தநுகரணமாக விருக்கும். இது எதுபோலவென்னில், பிருதிவி ஒன்றாகவிரு ந்து தனது சத்தியாகிய மண்ணினாலே எண்ணிற ந்தபேர் புசிப்புக்கு எண்ணிறந்த ஊர்களிலே எண்ணிறந்த பலவித பாண்டமா யிருத்தல்போல வென்றறிக.

௩௮. கன்ம மொன்று.

கன்மமொன்றாவது, கன்மம் ஒரு பொருளாக விருந்து எண்ணிறந்த பசுக்கள் மலத்துக்கும் எண்ணிறந்த புவனங்களிலே எண்ணிறந்த விட யப் புசிப்பாயிருக்கும். இது எதுபோலவென் னில், இரதம் ஒருபொருளாக விருந்து எண்ணிற ந்த பேர் வியாதிக்கு எண்ணிறந்த வூர்களிலே

எண்ணிறந்த பலவித மருந்தாக விருத்தல்போல வென்றறிக.

௩௯. மூவித கன்மம்.

மூவித கன்மமாவது, பிராரத்தம் புசிக்கையில் அந்தப்பிராரத்தத்தை வேண்டும் வேண்டாமென முற்றினன். இப்படி முற்றின வினைவை மேல் நடத்த வகைதெரியாத ஆன்மாவுக்குப், பதியானவர், ஆன்மாக்களுக்கு இதாகிதமாக முடிகிற நல்வினை தீவினையைக் காட்டினர். அந்த இருவினையைப் பசுச்செய்த ஆகாமியமாவது தூலகன்மம். இப்படிச்செய்யும் ஆகாமிய புண்ணிய பாவமாக மாயையிலே கட்டுக்கிடையாகிய சஞ்சிதமாவது சூக்குமகன்மம். இந்தக் கட்டுப்பாட்டுக்குத் தக்கதாக மறுபிறப்புக்குப் பதிகொடுத்த இன்பதுன்ப விடயத்தைப் பசு பஞ்சேந்திரியத்தின் வழியாய் விரும்பி வெறுத்துப் பத்துவிதமாகப் புசிக்கும் பிராரத்தமாவது அதிசூக்கும கன்மம். ஆக இப்படித் தூலகன்மம், சூக்குமகன்மம், அதிசூக்கும கன்மமா யிருக்குமென்றறிக.

௪௦. கன்ம மாறல்.

கன்ம மாறலாவது, நல்வினை தீவினையிரண்டும் புத்தி பூருவம், அபுத்தி பூருவம் என நான்காயிருக்கும். புத்தி பூருவ நல்வினையாவது, புத்தியிலே பட்டுத் திரிகரணங்களினாலே ஆன்மாக்களுக்குச் செய்யப்பட்ட இதங்களெல்லாம் மனப்பூருவமென்ற பெயரையுடைய புத்தி பூருவ நல்வினையாகும். இனி அபுத்திபூருவ நல்வினையாவது,

ஆன்மாக்களுக்கு அகிதம் நினைக்க இதமாக முடிவதும், அகிதஞ்சொல்ல இதமாக முடிவதும், அகிதஞ்செய்ய இதமாக முடிவதும், ஒருவன் பொருள்களைக் கள்வர் முதலாகிய ஆன்மாக்கள் களவிற் கொண்டுபோவதும், கேவலத்திற் சரீர எதுவினாலே இதமாக முடிவதும், அபுத்தி பூருவ நல்வினையாகும். இனிப் புத்தி பூருவ தீவினையாவது, புத்தியிலே பட்டுத் திரிகரணங்களினாலே ஆன்மாக்களுக்குச் செய்யப்பட்ட அகிதங்களெல்லாம் மனப்பூருவமென்ற பெயரையுடைய புத்தி பூருவ தீவினையாகும். இனி அபுத்தி பூருவ தீவினையாவது, ஆன்மாக்களுக்கு இதம் நினைக்க அகிதமாக முடிவதும், இதஞ்சொல்ல அகிதமாக முடிவதும், இதஞ்செய்ய அகிதமாக முடிவதும், கேவலத்தில் சரீர எதுவினாலே அகிதமாக முடிவதும், அபுத்தி பூருவ தீவினையாகும். ஆக இந்தப்படி நால்வகையாகிய இருவினையும் விரவிச்செய்து கட்டுப்பட்ட புண்ணிய பாவங்களுக்குத் தக்கதாக இன்ப துன்பங்கள் வரும். முன் செய்த வினைப்போகம் முந்தியும் பின் செய்த வினைப்போகம் பிந்தியும் நியதியாக வராமல், முறுகச்செய்த வினைப்போகம் முந்திவரும். இதுஎதுபோலவென்னில், முன்னே பனைவிதை, அதன்பின்னே தெங்கின்விதை, அதன்பின் கத்தரிவிதை, அதன்பின் கீரைவிதை, இப்படிமுற்பிற்பாடாகப் பயிரிட்ட பலன், கீரை பதினைந்து நாளிலும், கத்தரி முப்பது நாளிலும், தெங்கு ஐந்து வருடத்திலும், பனை பத்து வருடத்திலும் பலனாகி வரும். இதுபோல வென்றறிக.

சுக. பிராரத்த சொரூபம்.

பிராரத்த சொரூபமாவது, உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதியென்றும், காலமிருத்து ஆயுள், அவமிருத்து ஆயுளென்றும், இன்பபோகம்,துன்பபோகம் என்றும் வரும் ஆறுவிதமும்,சாதி ஆயுள் போகம் என மூன்று வகையாக இருக்குமென்றறிக.

சுஉ. பிராரத்த மூவகை வரவு.

பிராரத்த மூவகை வரவாவது, தெய்விகம், பௌதிகம், ஆன்மிகம் என மூன்ரும். இவற்றுள் தெய்விகமாவது, சனனமரணம் நரைதிரை வியாதி முதலியவாய் முன்னிலையின்றி வரும்.பௌதிகமாவது, மின் இடி காற்று மழை தீ முதலிய பூத முன்னிலையாக வரும். ஆன்மிகமாவது ஆன்மாக்கள் முன்னிலையாக வரும். இப்படித் தெய்விகம் பௌதிகம் ஆன்மிகம் வரும். பிராரத்தந் தான் நினைந்தபடியும் வரும். தான் நினையாதிருந்தாலும் வரும். தான் ஒன்று நினைக்க மற்றொன்ருகவும் வரும். இப்படி மூன்று விதமாக வருமென்றறிக.

சுஙு. மாயா காரிய போகம்.

மாயாகாரிய போகமாவது,கன்மத்திலேயுள்ள போகத்தை மாயா காரியத்திலே யுள்ள போகமென்று சொல்லப்படும். அதேதென்னில், இலக்கணைபாகப் பொருள் கொண்டு சொன்னது. கன்ம விலக்கணத்திலே போகமென்று சொல்லுவது சுபாவமாகப் பொருள் கொண்டு சொன்னதென்றறிக.

சச. கேவல சகலப் பேர்.

கேவல சகலப் பேராவது, கர்த்தாவே கேவலத்தைக்கூட்டுவிப்பதும் சகலத்தைச்கூட்டுவிப்பதுமாயிருக்கக், கேவலம் வருகிறபோது சிறிது வேளை யொரு விசாரத்தை முன்னிட்டுச் சகலமும் வந்தியைவானே னென்னில், பஞ்சவிடயங்களைப் புசிப்பிக்கின்றதற்குச் சகலத்திற் பட்ட இளைப்பாற்றி விடவேண்டிக், கர்த்தா சிவமாதி பஞ்ச தேவர்களாக நின்று நாதமாதி தத்துவங்களைக் கைவிடுத்தலால் கேவலம்வரும். சகலத்தில் தைரியமாகவே யிருக்கின்ற மலத்தை யடக்கவேண்டிக், கர்த்தா சிற்பரமாக நின்று பல விசாரங்களை முன்னிட்டு வருதலால் கேவலம் நீங்கும். ஆக இவ் விரண்டு மூர்த்தத்தின் தொழிலும் ஒருகாலத்தில் வந்துவிட்டால்,கேவலமும் சகலமும் இயையுமென்றறிக.

சரு. சிவ புண்ணிய காரணம்.

சிவபுண்ணிய காரணமாவது, அநாதி கேவலத்திலே கிடக்கிற பசுவுக்குப் பதி ஆதிசிருட்டி செய்கிறகாலத்தில்,பதி தாமே தலமாகவும் தீர்த்தமாகவும் மூர்த்தியாகவுந் திருமேனி கொண்டதில், விசேட தலத்திற் புழு முதலானவைகளாய்ச் சனித்தாலும்,வசித்தாலும், மரித்தாலும்,சிவபுண்ணியத்துக்குக் காரணமாகும். விசேட தீர்த்தத்திலே மீன் முதலியவைகளாய்ச் சனித்தாலும், வசித்தாலும், மரித்தாலும், திவலை தெறித்தாலும், நாற்கால்விலங்கு முதலானவை குடித்தாலும் அதில்

மூழ்கினுலும், அந்தத் தீர்த்தம் பாயும் பயிராய்ச் சனித்தாலும், அந்த நெல் முதலானவைகளைப் பறவை முதலானவைகள் புசித்தாலும், சிவபுண்ணியத்துக்குக் காரணமாம். ஆலயமுதலிய விசேடமுள்ள தலத்திற் சனித்தாலும், வசித்தாலும், மரித்தாலும் சிவ புண்ணியத்துக்குக் காரணமாம். இந்த மூவகையாகிய சூக்கும காரணத்தால், திருமேனிப் பணியாகிய அருச்சனை அபிடேகம் நைவேதன முதலானவைகளுக்கு உரித்தா யிருக்கின்ற விருக்ஷங்களாகவும், நெல் முதலான பயிர்களாகவும், பசு முதலான மிருகங்களாகவும் பிறப்பர். இது சிவ புண்ணியத்துக்குத் தூல காரணமாம். ஆக இது சிவபுண்ணியகாரணமென் றறிக.

சசரு. சிவ புண்ணியம்.

சிவ புண்ணியமாவது, ஆதிசிருட்டி முதல் மோக்ஷவரை பசுக்களுக்குக் கட்டுப் படுகின்ற வேறு வினையென்ற பெயரையுடைய சிவபுண்ணியம் உபாயச் சிவபுண்ணியம் உண்மைச் சிவபுண்ணியம் என இரண்டாகும். அதி லோரொன்றுக்குச் சரியை கிரியை யோகம் ஞானம் என நாலாக எட்டாகும். அதி லோரொன்றுக்குப் புத்தி பூருவம் அபுத்தி பூருவம் என இரண்டாகப் பதினுறுகும்.

அப்பதினுறில் உபாயச் சிவபுண்ணிய மெட்டில், அபுத்தி பூருவ உபாயச் சிவ புண்ணியம் நான்கு. அதில் அபுத்தி பூருவ உபாயச் சரியையாவது, ஒருவன் பசு புண்ணியமாகச் செய்யப்பட்ட

திரவிய முதலானவை கிரியாசாரியராகிய குருவுக்கும், கைலாசவாசனாகிய பரமசிவனென்ற திருநாமத்தையுடைய உபாயவடிவின் ஒப்புருவுக்கும், மும்மலந்தீர்ந்த சங்கமத்திற்கும் உபகாரமானாலும், ஒருவன் திரவியம் அரசர் கள்வர் முதலாகிய ஏதுக்களினாலே இம் மூன்று வடிவிலும் உபகாரமானாலும், அபுத்தி பூருவ உபாயச் சரியையாகும். இனி அபுத்தி பூருவ உபாயக்கிரியையாவது, கோகர்னத்திற் பழைய சிவலிங்கத்தில் குருட்டுப் பறைச்சி வில்வார்ச்சனை சிவ நிசியிற் பண்ணினதும், வேணுவன லிங்கத்தில் இடையன் பாலபிடேகம் பண்ணினதுமாய இந்த வகையாக உள்ள பணிகளினாலே, அந்த மூன்று வடிவையும் பரிசித்துப் பூசித்த பணிகளெல்லாம் அபுத்தி பூருவ உபாயக் கிரியையாகும். இனி அபுத்தி பூருவ உபாய யோகமாவது, திருமேனியிற் றிருவாபரணந் திருட நினைந்தவனும் திருமேனி காவற்காரனும் திருமேனியே தியானமாக விருப்பது முதலாகவுள்ள தியானங்களாக, அந்தமூன்று வடிவையுந் தியானம் பண்ணுவது அபுத்திபூருவ உபாய யோகமாகும். இனி அபுத்திபூருவ உபாய ஞானமாவது, வேதாகமங்களை விசாரித்துப் பஞ்சபூதம் சூரியன் சந்திரன் ஆன்மா ஆக எட்டு மூர்த்தி கொண்டதாகவும், பரநாதம் பரவிந்து அபரநாதம் அபரவிந்து ஆக அருவம் நான்கும், சதாசிவனென்னும் அருவுருவமொன்றும், மகேசுரன் உருத்திரன் விட்டுணு பிரமா ஆக உருவம் நான்கும், ஆக இந்த நவமூர்த்தமாகவும், இன்னும் பல

பேதங்களாகவும் பரம்பொருளிருக்குமென்றும், அண்டங்களெல்லாம் அவன் செயலென்றும், பிற ரிடத்திற் பிரசங்கம் பண்ணுகின்ற புகழே நம க்கு வேண்டுவதென்று நிலைத்து நிற்பது அபுத்தி பூருவ உபாயஞானமாகும். ஆக இந்த அபுத்தி பூருவ உபாயச் சிவபுண்ணியம் நான்காம். இந்த நான்கினுக்கும் பலனாவது, பூமியின் கண்ணே பிறந்து, நல்வினைப் போகத்தினுஞ் சற்று விசேட மாகவும், ஒன்றுக்கொன்று உயர்ந்த போகமாக வும் புசிப்பர்.

இனிப் புத்தி பூருவ் உபாயச் சிவபுண்ணிய நா லில், புத்தி பூருவ உபாயச் சரியையாவது, கிரியா சாரியராகிய குருவுக்கும், கைலாச வாசனாகிய பரமசிவனென்ற திருநாமத்தை யுடைய உபாய வடிவின் ஒப்புருவுக்கும், மும்மலந்தீர்ந்த சங்க மத்துக்கும், ஒருவன் தனது திரவிய முதலான வைகளைத் திருமேனி பரிப்பார் கையிற் கொடுத் துப் பணிசெய்வதும், ஆலயத்திற் றிருவலகு திரு மெழுக்கு திருவிளக்கு முதலானவை யிடுதலும், திருநந்தன வனம் திருமாலைப்பணி முதலாயவை யும், மற்றுந் தான் திருமேனியைப் பரிசியாமற் செய்யும் பணிகளும்,மனப்பூருவமென்ற பெயரை யுடைய புத்திபூருவ உபாயச் சரியை யாகும். இதற்குப் பலனாவது, சிவலோகத்தில் ஒரு அதி காரத்தைப் பெற்றிருந்து வசிப்பர். இனிப் புத்தி பூருவ உபாயக்கிரியையாவது அந்த மூன்று வடிவையுந் தான் பரிசித்துப் பூசித்த பணிகளெல்

லாம் புத்தி பூருவ உபாயக் கிரியையாகும். இதற்குப் பலனாவது, சிவலோகத்திற் சிவனுடைய சமீபத்திலுள்ள ஒரு அதிகாரத்திலிருந்து வசிப்பர். இனிப் புத்தி பூருவ உபாயயோகமாவது, அம்மூன்று வடிவே பொருளாக நம்பித் தியானம் பண்ணுவது புத்தி பூருவ உபாய யோகமாகும். இதற்குப் பலனாவது, சிவலோகத்திற் சிவனுடைய சமீபத்திற் சிவ சொரூபத்தைப் பெற்றுப் பிரதிவிம்பம்போல விருந்து வசிப்பர். இனிப் புத்தி பூருவ உபாய ஞானமாவது, வேதாகமங்களை விசாரித்துக், கிரியாசாரியரை ஆவாகன மூர்த்தமென்றறிந்து, பரமசிவன், பஞ்சபூதம் சந்திரன் சூரியன் ஆன்மா ஆக அட்டமூர்த்தி கொண்டவனாகவும்,பரநாதம் பரவிந்து அபரநாதம் அபரவிந்து ஆக அருவ நான்கும், சதாசிவனென்னும் அருவுருவம் ஒன்றும், மகேசுரன் உருத்திரன் விட்டுணு பிரமா ஆக உருவ நான்கும் ஆக நவமூர்த்தமாகவும், பின்னும் பல பேதங்களாகவும் இருப்பனென்றும், அண்டங்களெல்லாம் அவன் செயலென்றும், அந்தப் பொருளிலே அவனுக்கு நேயம் பிறக்கின்றதாகவும், இந்தப் பிரயோசனமே தனக்கு வேண்டுவதென்றும், அறிந்து நிலைத்து நிற்பது, மனப் பூருவமென்ற பெயரையுடைய புத்தி பூருவ உபாய ஞானமாகும். இதற்குப் பலனாவது, சிவலோகத்திற் சிவனுடைய சமீபத்திற் சிவரூபத்தைப் பெற்றிருந்து சிவன் திருவுளத்திலே யடைத்தருளு மவையெல்லாம் அறிந்துகொண்டிருந்து, பின்பு பூமியின்கண்ணே பிற

ந்து திரிகால தரிசனத்துக் குடையவராகவும் சாபாநுக்கிரகங்களுக்கு அதிகாரியாகவும் சிவனைத் தரிசிக்கவுடையவராகவு மிருப்பர். ஆக இவை புத்தி பூருவ உபாயச் சிவபுண்ணியம் நான்கு. இந்த நான்கு புண்ணியத்தையும் புகழை விரும்பிச் செய்தாலும் விநோதமாகச் செய்தாலும், பூமியின்கண்ணே பிறந்து, நல்வினைப் போகத்திலும் அபுத்தி பூருவ சிவபுண்ணிய போகத்திலும் சற்று விசேடமாகவும், ஒன்றுக்கொன்று உயர்ந்த போகமாகவும், இன்பத்தைப் புசிப்பர். அபுத்தி பூருவ புத்தி பூருவ உபாயச் சிவபுண்ணியம் எட்டு. இப்படி எந்தெந்தத் தேவதைகளை நோக்கிச் செய்த புண்ணியத்திற்கும் அந்தந்தப் பதமுத்தியே பலனாகக்கூடும்.

இனி, உண்மைச் சிவபுண்ணியம் எட்டில், அபுத்தி பூருவ உண்மைச் சிவபுண்ணியம் நான்கு. அவற்றுள், அபுத்தி பூருவ உண்மைச் சிவபுண்ணிய சரியையாவது, ஆன்மா, நின்ற சிற்பரம் பெருகி ஞானாசாரியராக இப்பொழுதுதிருமேனி கொண்டதென்று சற்றும் புத்தியிற் படாமல், தாழ்ந்தார் ஒத்தார் உயர்ந்தாராகக் கருதி, அந்த உபாயவடிவின் ஒப்புருவில் அபுத்திபூருவ உபாயச் சரியை கூடுவதுபோல இந்த உண்மைவடிவிலுங் கூடுதல். இது அபுத்தி பூருவ உண்மைச் சிவபுண்ணிய சரியையாகும். இதற்குப் பலனாவது, ஞானாசாரியர் எழுந்தருளின புவன வட்டங்களிலே புல் மரம் போல்வன பரிசமாகிய ஓரறி வுடையதாகவும், அட்டை சங்கு போல்வன பரிசம் இரதமா

கிய இரண்டறி வுடையதாகவும், கறையான் எறும்பு போல்வன பரிசம் இரதம் கந்தம் ஆகிய மூன்றறிவுடையதாகவும், வண்டு ஞெண்டு போல்வன பரிசம் இரதம் கந்தம் உருவம் ஆகிய நாலறிவுடையதாகவும், மக்கள் விலங்கு போல்வன பரிசம் இரதம் கந்தம் உருவம் சத்தமாகிய ஐயறிவுடையதாகவும், ஒருசார் விலங்கு மக்கள் இந்த ஐயறிவும் பகுத்தறிவொன்றும் ஆக ஆறறிவுடையதாகவுந் திருமேனிக் குபகார மாகிறதாகவும் இருந்து வசிப்பர். இனி அபுத்தி பூருவ உண்மைக் கிரியையாவது, திருமேனியைத் தாழ்ந்தார் ஒத்தார் உயர்ந்தாராகக் கருதி, அந்த உபாய வடிவின் ஒப்புருவில் அபுத்தி பூருவ உபாயக் கிரியை கூடுவதுபோல இந்த உண்மைவடிவிலுங் கூடுதல் அபுத்தி பூருவ உண்மைக் கிரியையாகும். இதற்குப்பலனுவது, ஞானசாரியரெழுந்தருளின திருநகரிலே மானுடராகப் பிறந்து திருவாக்குச் செவியிலே கேட்கத்தக்கதாகச் சமீபத்தில் வசிப்பர். இனி அபுத்திபூருவ உண்மை யோகமாவது, திருமேனியைத் தாழ்ந்தார் ஒத்தார் உயர்ந்தாராகக் கருதி, அந்த உபாயவடிவின் ஒப்புருவில் அபுத்தி பூருவ உபாயயோகங் கூடுவதுபோல இந்த உண்மை வடிவிலுங் கூடுதல் அபுத்தி பூருவ உண்மை யோகமாகும். இதற்குப் பலனுவது, ஞானசாரியரெழுந்தருளின திருநகரில் மானுடராகப்பிறந்து திருமேனியிலே நிகழுகின்ற திருவாக்கு முதலாகிய நடையுடை பாவகத்தைப்போல நாமுங் கண்டு பிடித்துப் பார்ப்போமெனக் கருதி நடந்து

வசிப்பர். இனி அபுத்தி பூருவ உண்மை ஞானமாவது, ஞானசாரியரை உயர்ந்தாராகக் கருதி, ஞான சாத்திரங்களை விசாரித்துக், கர்த்தாவே திருமேனி கொண்டதென்று நாம் பாவித்துக் கொள்ள வேண்டுமென்றும், அண்டங்களெல்லாம் மாயாகாரியமாக விருக்கிறதென்றும், நமக்கினிமையான வசனங்களைக் கேட்டறிந்துகொள்வோமென்றுங், காத்திருந்து வசித்தல் அபுத்தி பூருவ உண்மை ஞானமாகும். இதற்குப் பலனாவது, ஞானசாரியர் திருமேனியில் நிகழுகின்ற குணகுணங்களை இன்ன வேதுவினாலே யுண்டானதென்று விசாரித்தறியாமல், அவ்விடத்திலே எப்படி அகுணம் நிகழ்ந்தாலும் அதை நாம் விசாரிக்கலாகாதென்று ஆவ்விடத்திற் குணமாகவே கருதித், தற்புகழை விரும்பி யிருந்து வசிப்பர். ஆக அபுத்தி பூருவ உண்மைச் சிவபுண்ணியம் நான்கு.

இனிப் புத்திபூருவ உண்மைச் சிவ புண்ணிய நாலில், புத்தி பூருவ உண்மைச் சரியையாவது, அந்த உபாயவடிவின் ஒப்புருவில் புத்தி பூருவ உபாயச் சரியை கூடுவதுபோல உண்மை வடிவினுங் கூடுதல் புத்தி பூருவ உண்மைச் சரியையாகும். இதற்குப் பலனாவது, இந்த உண்மைத் திருமேனி கொண்ட உலகத்தில் நன்மையாளரென்றும் பொறுமை யுடையவரென்றுந் தோன்ற வசிப்பர். இனிப் புத்தி பூருவ உண்மைக் கிரியையாவது, அந்த உபாயவடிவின் ஒப்புருவில் புத்தி பூருவ உபாயக்கிரியை கூடுவதுபோல இந்த

உண்மைவடிவிலுங் கூடுதல் புத்தி பூருவ உண்மைக் கிரியையாகும். இதற்குப் பலனாவது, இந்த உண்மைத் திருமேனிச் சமீபத்தில் திரிபதார்த்த விசாரணை யுடையவரென்றும் யானெனதென்பதற்றிருக்கிறவ ரென்றுந் தோன்ற வசிப்பர். இனிப் புத்தி பூருவ உண்மை யோகமாவது, இந்த உண்மை வடிவே பொருளென்று நம்பித் தியானம் பண்ணுவது புத்தி பூருவ உண்மையோகமாகும். இதற்குப் பலனாவது, இந்த உண்மை வடிவினிடமாகத் திருவவதாரஞ் செய்து சிக்ஷரக்ஷக் குள்ளாயிருந்து வசிப்பர். இனிப் புத்தி பூருவ உண்மை ஞானமாவது, இந்த உண்மை வடிவின் காரணத்தையும் அவ்வடிவிலே தோன்றிய குணகுணங்களையுங் கேட்டுச், சிந்தித்து, நம்முடைய மலக்கிழங்கை இதுகாலவரையிலே பஞ்சகர்த்தாக்களாலேயும் பிடுங்கப்படாமற் போனதால், நாம் முன்செய்த உண்மைச் சிவபுண்ணியப் பழுப்பினாலே இதுவே காரியமாக அந்தப் பராசத்தியே இரங்கித் திருமேனி கொண்டதென்றும், அந்தச் சிவபுண்ணிய மேறுகின்றபொழுது நாம் அறிந்தும் அறியாமலும் நடந்த வழுவாமையும் வழுவுமே இந்த வடிவிற் குணகுணங்களாக நிகழ்வதென்றும் தெளிந்து, நிட்டைகூடித், திருவடி சேர்வர். ஆகப் புத்தி பூருவ உண்மைச் சிவபுண்ணியம் நான்கு. ஆக உண்மைச் சிவபுண்ணியம் எட்டு. ஆக உபாயம் உண்மையென இருவகைச் சிவபுண்ணியம் பதினாறு. இந்தப் பதினாறிற் பதினைந்தும் மலரிலே. புத்தி பூருவ உண்மை

ஞானமொன்றும் அருள் நிலே. இந்தப் புத்தி பூரு வ உண்மைஞானமானது, தத்துவரூபம், தத்துவ தரிசனம், தத்துவசுத்தி, ஆன்மரூபம், ஆன்மதரி சனம், ஆன்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவ யோகம், சிவபோகம் எனப் பத்துக்காரியமா யிருக்கும். அதில் தத்துவரூபமாவது, முப்பத் தாறு தத்துவத்தின் தொழிலே யறிதல். தத்துவ தரிசனமாவது, அந்தத் தத்துவங்களேச் சடமென் றறிதல். தத்துவ சுத்தியாவது, அந்தத் தத்து வங்களேச் சிவஞானத்தினலே அந்நியமென் றறி ந்து நீங்குதல். ஆன்மரூபமாவது, தத்துவகர்த்தா ஆன்மாவென்றறிதல். ஆன்மதரிசனமாவது, ஆன் மா செயலற்றவனென் றறிதல். ஆன்ம சுத்தியா வது, அந்தத் தத்துவங்களேக் கொடுத்து ஒருவன் அசைக்க ஆன்மா அசைகிறதென் றறிதல். சிவரூப மாவது, இப்படிக் கிருத்தியப் படுத்துகிறவனே திருமேனிகொண்டு திகைத்துநிற்கு மான்மாவை ஒத்தொழுகி முப்பொருளேயு மறிவிக்குங் கர்த்தா வென்றறிதல். சிவ தரிசனமாவது, இப்படி யிர ங்கி அவன் அவள் அதுவாகி நின் றுபகரிக்குந் தனது தொழிலேயு மறிவித்துத் திகைப்புத் தீர் த்து மோக்ஷமாக்கும் உண்மை வடிவ்வத்தேடிக் காண்டல். சிவயோகமாவது, இவ்வடிவி னசை வின் வழியே நிற்றல். சிவயோகமாவது, இவ் வடிவே தானுகப்போதல். ஆக இது சிவபுண்ணி யமென் றறிக.

சஎ. கன்ம பரிபாகி தன்மை.

கன்ம பரிபாகி தன்மையாவது, சரீரப் பற்று விடாமல், வேதாகமங்களே யோதி அறுதியிட்

டறிந்து, நித்தியகன்மாநுட்டானங்களை வழுவாது அநுட்டித்துக்கொண்டு, ஆலயமே பிரதானமாக வழிபடல். இது கன்ம பரிபாகி தன்மை.

சஅ. மலபரிபாகி தன்மை.

மலபரிபாகி தன்மையாவது, சரீரப் பற்றுவிட்டுத், திருமேனியைத் தேடிக் கண்டு, ஞான சாத்திரங்களை யோதித், திருவாக்கைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டையைப் பொருந்துதல் மலபரிபாகி தன்மையென் றறிக.

சகூ. மல பரிபாகம்.

மலபரிபாகமாவது, மலம்-என்பது மலசத்தி. பரி-என்பது உபசர்க்கம். பாகம்-திரிபு; கெடுதலும் ஆம். ஆன்மாவின் கூடவிருந்த ஆணவமலத்தின் றன்மையில், யானெனதென்பதுகெட்டு, இருவினையொப்புக் காண்டல். இது எதுபோலவென்னில், அருண உதயகாலம் இராவானது இராசதந்தியாகிய இருளிற் சிறிது கெட்டு நிற்பதுபோலவென் றறிக.

ருo. சத்தி நிபாதம்.

சத்திநிபாதமாவது, சத்தி-என்பது சிவசத்தி. நி-என்பது உபசர்க்கம். பாதம்-என்பது விழுதல்; பதிதலுமாம். மலசத்தி சிறிது நீங்கின பசுவில் முன் கூடியிருந்த சிவசத்தி மிகுந்து இருவினையொப்புக் கண்டவிடத்து உண்மைச் சரியையாதிய பொருளென் றறிதல். இது எதுபோலவென்னில், சூரிய கிரணத்தினாலே இருள் முழுவ

துங் கெட்டவிடத்துக் கண்ணானது மாயாபதார்த்தத்தைக் காண்டல்போலு மென்றறிக.

ருக. இருவினை யொப்பு.

இருவினை யொப்பாவது, தீவினை சனன மரண துக்கத்தைக் கொடுப்பதுபோல நல்வினையுஞ் சனன மரண துக்கத்தைக் கொடுப்பதை யறிந்து, இருவினையுஞ் சரியென்று கண்டு மறுத்தல். இது எதுபோலவென்னில், ஒருகிரகத்தன் நாடகலீலை செய்யும் பரஸ்திரீ தொழிலில் மயங்கி, அவளைச் சொந்தஸ்திரீயிலும் மயக்கமாகக் கண்டு ஆசித்துக்கொண்டிருக்கிற நாளில், இல்லற நூல் கேட்டுப் பரஸ்திரீயினாற் றுன்பம் வருவதை யறிந்து, அவளை வெறுத்துச் சொந்தஸ்திரீயை மட்டும் ஆசித்துவரும் நாளில், துறவற நூல் கேட்டு இவளாலும் துன்பம் வருவதை யறிந்து வெறுத்து, இரண்டையுஞ் சரியாகக் கண்டு விட்டது போல வென்றறிக.

ருஉ. நிருவாண தீக்ஷை.

நிருவாண தீக்ஷையாவது, உபாய நிருவாணம், உண்மை நிருவாணம் என் றிருவகையாம். அதில் உபாய நிருவாணமாவது, ஆகமப் பிரமாணத்தின்படி சட்சு பரிசம் வாக்கு பாவனை சாத்திரம் யோகம் ஔத்திரி எனச் சத்த தீக்ஷையும் பஞ்சகலா சோதனையும் மந்திர கிரியா பாவகமுமாகச் செய்து முடித்தலென் றறிக. இனி உண்மை நிருவாணமாவது, அநாதி கருவிலெழுந்த இரண்டு விளையாட்டில், ஆனந்த விளையாட்டாகிய ஆணவமலத்

துடனே இரண்டற நிற்கின்ற ஆன்மாக்களுக்கு, அந்த மலத்தை நீக்கிக் கரையேற்ற வேண்டியெ ழுந்த அருள் விளையாட்டாகிய நாத விந்து சத்தி, தனது நிவிர்த்தி பிரதிட்டை வித்தை சாந்தி சாந் தியாதீதம் என்னும் பஞ்ச கலைகளினாலே, தனது பேதமான இருவித மாயையில் ஒருவிதமான சுத்த மாயையில் ஐந்து தத்துவமும் மற்றொரு விதமான அசுத்த மாயையில் முப்பத்தொரு தத் துவமும் ஆக முப்பத்தாறு தத்துவத்தையும் காரியப்படுத்தி, இந்தத் தத்துவங்களினாலே இரு நூற் றிருபத்துநான்கு சிற்றண்டமாகிய புவனத் தையுங்காரியப்படுத்தி, இந்தப் புவனங்களினாலே ஐம்பத்தொரு வன்னத்தையுங் காரியப்படுத்தி, இந்த வன்னங்களினாலே எண்பத்தொரு பதத் தையுங் காரியப்படுத்தி, இந்தப் பதங்களினாலே பதினொரு மந்திரத்தையுங் காரியப்படுத்தி, இப்ப டிச் செய்திருப்பதாகிய ஒரு பேரண்டத்துக்குள் ஆன்மாக்களுக்குப் பிண்டசெயலாவது, அந்த மாயாதத்துவம் முப்பத்தாறினாலே சரீரமுண்டா ய், இந்தச் சரீரத்துடனே நெடுங்காலங் கேவல சகலப்பட்டு, இருவினைப் போகங்களைப்புசித்துக், கன்மபரிபாகம் பிறந்த பின்பு சத்திநிபாதம் பிற ந்து, பின்பு இருவினை யொப்புக் கண்டு, பின்பு வேறு வினையாகிய சிவ புண்ணியப் பழுப்பினாலே இந்தத் திருவருளே திருமேனி கொண்ட உண் மை வடிவு தரிசனமான சாதகனுக்கு, நம்பிக் கை, பரிபாகம், நடுவு நிலைமை, புத்தி கூர்மை என்னும் நால்வகைத் திறத்தினாலே மனவாக்குக்

காயத்தினால் நான்கு பண்பு பிறந்திருப்பது கண்
டும், மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என்
னும் நான்கு பாதத்தையுடைய சத்திநிபாதம் பிற
ந்தகாலம் பார்த்தும், ஆறத்துவாவுஞ் சோதிக்கு
ம்படி மாயா தத்துவத்துக் காதியான கலையை
ஐந்து கலையாக்கி, அதி லொரு கலையினாலே மல
நிவிர்த்தி பண்ணுவது நிவிர்த்திகலை. அந்த மல
சையோகியாய் இல்லையென்னப்பட்டுக் கிடந்த
ஆன்மாக்களை ஒரு கலையினாலே உண்டென்ன
நாட்டுவது பிரதிட்டாகலை. அந்த ஆன்மாக்
களுக்குப் பசுபோதமென்னும் அறிவையெழுப்
புவது வித்தியாகலை. அந்த ஆன்மாக்கள் மலம்
விடுக்கப்பட்ட தகைதீர ஒரு கலையினாலே சாந்
தம் பண்ணுவது சாந்திகலை. ஆன்மாக்களுக்கு
முப்பத்தாறு தத்துவத்தையுஞ் சம்பந்தப் படுத்தி
மருட்கேவல மிரண்டும் நீங்கின அருட் கேவல
மான முத்தி காலத்தில் ஒரு கலையினாலே சுத்
தாவத்தையின் காரிய அவத்தை யைந்தில் துரியா
தீத மென்னும் சாக்கிராதீதப் படுத்துவது சாந்
தியாதீதகலை. ஆக இப்படிப்பட்ட பஞ்ச கலை
யிற் பழகுவதினாலே ஆன்மா முப்பத்தாறு தத்து
வத்திலும் பழகும். இந்தத் தத்துவத்திற் பழகு
வதினாலே இருநூற்றிருபத்து நான்கு புவனத்தி
லும் பழகும். இந்தப் புவனத்திற் பழகுவதி
னாலே ஐம்பத்தொரு வன்னத்திலும் பழகும்.
இந்தவன்னத்திற் பழகுவதினாலே எண்பத்தொரு
பதத்திலும் பழகும். இந்தப் பதத்திற் பழகுவதி
னாலே பதினொரு மந்திரத்திலும் பழகும். ஆத

லால், பதம் எண்பத்தொன்றையுஞ் சோதிக்கும்போது இதனாலுண்டான மந்திரம் பதினொன்றென அறிந்து இகழும். அதனால் மந்திரங்களிற் கட்டுப்பாடான கன்மஞ் சுத்தியாம். புவனம் இருநூற்றிருபத்து நாலையுஞ் சோதிக்கும்போது இதனாலுண்டான வன்னம் ஐம்பத்தொன்றென அறிந்து இகழும். அதனால் வன்னங்களிற் கட்டுப்பாடான கன்மம் சுத்தியாம். தத்துவம் முப்பத்தாறையுஞ் சோதிக்கும்போது இதனாலுண்டான புவனங்கள் இருநூற்றிருபத்துநாலென் றறிந்து இகழும். அதனாற் புவனங்களிற் கட்டுப்பாடான கன்மஞ் சுத்தியாம். கலை யைந்தையுஞ் சோதிக்கும்போது இதனாலுண்டான தத்துவங்கள் முப்பத்தாறென் றறிந்து இகழும். அதனால் தத்துவங்களிற் கட்டுப்பாடான கன்மஞ் சுத்தியாம். அருளைச் சோதிக்கும்போது இதனாலுண்டான கலை யைந்தென வறிந்து இகழும். அதனாற் கலைகளிற் கட்டுப்பாடான கன்மஞ் சுத்தியாம். இந்தப் பஞ்சகலையுஞ் சுத்தியாகும்போது முன் சகலத்திற் றீப நிழல்போல் நின்ற புருடமுஞ் சுத்திப்படும். இப்படி ஆறத்துவாவையுஞ் சோதிக்கவே ஆன்மா மூலமலம் விடுதல் கூடித் திருவருளைச் சேரும். இப்படி யநுபவப்படுத்தி விடுதலாக்கித் திருவடி சேர்ப்பித்தல் உண்மை நிருவாணமென் றறிக.

ருசு. பஞ்சாக்ஷர வரலாறு.

அதில் சூக்கும பஞ்சாக்ஷர வரலாறுவது, அநாதி கருவிலெழுந்த ஆனந்த வேதுவாகப் பசு

மல சையோகியாய் அப்புறப்பட்டு நிற்றலால், இந்தப் பசுவுக்கு "அ" ஆகிய சுட்டுப்பெயர் அகாரமாயிற்று. பின்பு அந்தக் கருவிலெழுந்த அருளேதுவாகப் பதி இப்புறமும் அந்த அருளேதுவாகத் திரோதம் உப்புறமுமாகி நிற்றலால், திரோதத்துக்கு "உ" ஆகிய சுட்டுப்பெயர் உகாரமாயிற்று. ஆணவமலம் யானெனதென்ன நின்று ஆங்காரவசனம் பிறக்கும் போதெல்லாம் மகார ஒற்றோசையே பிறந்து நிற்றலால், ஆணவமலத்துக்கு ஓசைச் சுட்டாகிய பெயர் மகாரவொற்றாயிற்று. இப்புறப்பட்ட பதியாகிய நாதத்தின் அருட்சத்தி காரியப்பட்டுத் திரண்டு அக்ஷரங்கள் பிறக்கின்றதற்குக் காரணமாகி நிற்றலால், அந்தச் சத்திக்குத் திரட்சியாகிய சுட்டுப்பெயர் விந்துவாயிற்று. இப்படித் திரண்ட சத்திக்குக் காரணமாகிய பதி சூக்குமநாதமாகி நிற்றலால், அந்தப் பதிக்கு நாதமாகிய சுட்டுப் பெயர் நாதமாயிற்று. ஆக இது சூக்கும பஞ்சாக்ஷர வரலாறு.

இனித் தூல பஞ்சாக்ஷர வரலாறுவது, ஆதியிலே ஆன்ம சையோகமான மலத்தைப் பரசிவம் "சி" என்று வெறுத்தே நிற்றலால், இந்தச் சிவத்திற்குத் தொழிற்பெயர் சிகாரமாயிற்று. மல சையோக ஆன்மாவின் மலத்தை நீக்கி ஆன்மாவைப் பராசத்தி "வா" வென்று விரும்பியே நிற்றலால், இந்தச் சத்திக்குத் தொழிற்பெயர் வகாரமாயிற்று. மலத்தின் செருக்கினாலே ஆன்மா யானேயிறவானென்று நிற்றலால், இந்த ஆன்மாவுக்குத் தொழிற்பெயர் யகாரமாயிற்று. ஆன்மாவுக்குப்

பெத்தகாலம் எண்ணிறந்த சத்தியைக் கொடுக்கவும் முத்திகாலம் எண்ணிறந்த சத்தியைக் கொடுக்கவும் அதிகாரி நானென்றே திரோதான சத்தி நிற்றலால், இந்தத் திரோதான சத்திக்குத் தொழிற்பெயர் நகாரமாயிற்று. ஆணவமலம் திரோதத்தினுடனே கூடிச் சத்தியுண்டாய்ப் பிரபஞ்சமெல்லாம் நமதென்று மமதையே செலுத்தி நிற்றலால், இந்த ஆணவ மலத்துக்குத் தொழிற்பெயர் மகாரமாயிற்று. ஆக இது தூல பஞ்சாக்ஷர வரலாறென்றறிக.

ருச. ஞானி தன்மை.

ஞானி தன்மையாவது, தேக நீங்கல், அந்தியேட்டி, சஞ்சிதமின்மை ஆக மூன்று. அவற்றுள், ஞானிக்குத் தேக நீங்கலாவது, தசகாரியத்துள் தத்துவ சுத்திப்படுதல். அந்தியேட்டியாவது, தசகாரியத்துள் சிவயோகத்தில் நிற்றல். சஞ்சிதமின்மையாவது, தசகாரியத்துள் சிவதரிசனப்படுதல். திருநோக்க தீக்ஷை பெற்று அதனால் ஆன்மா திருவருளேமேலிட்டு மலபோதம் நீங்கிச் சிவபோதமானதால் ஞானிக்குச் சஞ்சிதமில்லை. இப்படிச் சஞ்சிதமில்லாதது எதுபோலவென்னில், ஒருவன் பலவூரை யேற்று மணியம் பண்ணுகிறபோது அவன் பயிரேற்றிப் பறித்தடித்து வைத்த கட்டுக் கிடையெல்லாம், பின்பு புது மணியகாரன் வந்தவுடனே பழைய மணியகாரன் கையாட்சி பண்ணப்படாமற் போவதுபோல. ஆக இது ஞானி தன்மை யென்றறிக.

ருரு. சரீரம், திருமேனி வருதல்.

சரீரம், திருமேனி வருதலாவது, மலப்பிணியால் ஆன்மாவுக்குச் சரீரம் வந்தது. ஆன்மாவின் மலப் பிணியைத் தீர்க்குங் கருணையால் பதிக்குத் திருமேனி வந்ததென்றறிக.

ருசு. பிரபஞ்ச உற்பத்தி யொடுக்கத்திற்குக் காரணம்.

பிரபஞ்ச உற்பத்தியொடுக்கத்திற்குக் காரணமாவது, ஆன்மாவானது ஆன்மபோதத்துடனே ஒடுங்கினாற் பிரபஞ்சமுண்டாம். ஆன்மபோதமானது ஆன்யாவினிடத்திலே யொடுங்கினாற் பிரபஞ்சமொடுங்கும். சிவமானது சத்தியினிடத்திலே யொடுங்கினாற் பிரபஞ்சமுண்டாம். சத்தியானது சிவனிடத்திலே யொடுங்கினாற் பிரபஞ்சமொடுங்கும். ஆக இது பிரபஞ்ச உற்பத்தி யொடுக்கத்திற்குக் காரணமென் றறிக.

ருஎ. கெட்டு மோக்ஷம்.

கெட்டு மோக்ஷமாவது, பசு மோக்ஷஞ் சேருங்கால், தான் கெட்டு மோக்ஷஞ் சேருமோ? கெடாமல் மோக்ஷஞ் சேருமோ? பசு கெட்டாற் சடமாகிப்போம். அதற்கு மோக்ஷம் வேண்டுவதில்லையாம். கெடாதிருந்தாற் பசு ஆணவமலத்தை விட்டுநீங்காது. இவ்விரண்டு மில்லாததால் இனிச் சித்தாந்தமெப்படி யென்னில், விடயத்தின் வழித்தாய்ப் புசிக்கின்ற மலபோதமாகிய ஆன்மபோதத்தின் றொழில் கெட்டு மோக்ஷமாம். இது

ளதுபோலவென்னில், கண் இருளோடு சேருந் தொழில்கெட்டு ஆதித்தன் வந்தவிடத்து ஒளியோடு சேர்வதுபோலவென்றறிக.

ருஅ. பிரபஞ்சத் தோற்றமொடுக்கம்.

பிரபஞ்சத் தோற்றமொடுக்கமாவது, அபரநாதமும் அபரவிந்துவும் ஆதியில் அதிசூக்குமமாகிய பஞ்சபூத தேவதையை யுண்டுபண்ணி, அதற்குச் சூக்கும தேகத்தையுந் தூலதேகத்தையும் கொடுத்துப், பிருதிவியின் கூறுக உஉச-சிற்றண்டமும், அப்புவின் கூறுக உஉச-சிற்றண்டமும், தேயுவின் கூறுக உஉச-சிற்றண்டமும், வாயுவின் கூறுக உஉச-சிற்றண்டமும் உண்டுபண்ணி, ஒவ்வொரு சிற்றண்டத்துக்கு ஒவ்வொரு பஞ்சகர்த்தாக்களையும் உண்டுபண்ணி வைத்துப், பிருதிவியாதி ஐந்துவகைப் பிரமாண்டத்திற்கும் அந்தந்த அதிசூக்குமபூத தேவதை காவலாக அமைத்திருக்கும். பின்பு சதாசிவமூர்த்தி ஆயுளிறுதிகாலத்தில், பஞ்சகர்த்தாக்களும், ஐந்துவித அண்டங்களும், பஞ்சபூதங்களும், தோன்றினவடைவே ஒடுங்கும். ஆக இது பிரபஞ்சத் தோற்ற மொடுக்கமென்றறிக.

ருகூ. மோக்ஷ வழி.

மோக்ஷ வழியாவது, ஆன்மாவுக்கு முந்தினது சிவபுண்ணியகாரணம். அதன்பின் பக்குவம். அதன்பின் சிவபுண்ணியம். அதன்பின் மலபரிபாகம். அதன்பின் சத்திநிபாதம். அதன்பின்

திருவுளம் பற்றிய ஞானசாஸ்திர முதலிய திரு வாக்கைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து வீட்டை கூடி மோக்ஷமாதல். ஆக இது மோக்ஷவழி யென்றறிக.

மரபு முற்றிற்று.